அரசாங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இற்கமைய இலங்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற

# 2025 ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

செலவுத் தலைப்பு – 123

இரண்டாம் மாடி, கட்டடம் 01,
“செத்சிறிபாய”
பத்தரமுல்லை

# உள்ளடக்கம்

அத்தியாயம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | **அத்தியாயம் 1: நிறுவனத் தோற்றப்பாடு** | **01-17** |
| | 1.1. அறிமுகம் | 01 |
| | 1.2. அமைச்சு தாபிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சட்டகம் | 01 |
| | 1.3. அமைச்சின் குறிக்கோள்கள் | 02 |
| | 1.4. நோக்கு, செயற்பணி | 02 |
| | 1.5. அமைச்சின் பிரதான விடயத்துறைகள் பணிகள் | 02 |
| | 1.6. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு | 10 |
| | 1.7. வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்கள் | 11 |
| | 1.8. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் | 13 |
| 2. | **அத்தியாயம் 2 : முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு** | **18 - 41** |
| | 2.1. நிருவாகப் பிரிவு | 18 |
| | 2.2. தாபனப் பிரிவு | 18 |
| | 2.3. திட்டமிடல் பிரிவு | 20 |
| | 2.4. தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 22 |
| | 2.5. இடம்பெயர்ந்துள்ளவர்களை மீள்குடியேற்றும் நிகழ்ச்சித்திட்டம் | 23 |
| | 2.6. அரச – தனியார் பங்குடைமை வீடமைப்புக் கருத்திட்டம் | 24 |
| | 2.7. இந்திய உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்கள் | 25 |
| | 2.8. நீர் வழங்கல் பிரிவு | 26 |
| | 2.9. வீடமைப்புப் பிரிவு | 32 |
| | 2.10. வீடமைப்பு ஆணையாளர் பிரிவு | 35 |
| | 2.11. நிதிப் பிரிவு | 37 |
| | 2.12.உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 37 |
| | 2.13.நிர்மாணப் பிரிவு | 38 |
| | 2.14.பொறியியல் பிரிவு | 39 |
| | 2.15.நிர்மாணக் கொள்கைப் பிரிவு | 40 |
| | 2.16.கட்டிடக் கலைப் பிரிவு | 41 |
| 3. | **அத்தியாயம் 3 : 2025 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை** | **42-47** |
| | 3.1. 2025 ஆண்டுக்கான நிதிக் கூற்று | 42 |
| | 3.2. ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை | 46 |
| | 3.3. அன்பளிப்பு மற்றும் வேறு பெறுகைகள் பற்றிய செயலாற்றுகை | 46 |
| | 3.4. நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை | 47 |
| | 3.5. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 47 |
| 4. | **அத்தியாயம் 4 : செயலாற்றுகைச் சுட்டிகள்** | **48-48** |
| | 4.1. அமைச்சின் செயலாற்றுகை சுட்டிகள் | 48 |
| 5. | **அத்தியாயம் 5 : நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் செயாற்றுகை** | **49-51** |
| | 5.1. இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் | 49 |
| | 5.2. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள் | 50 |

**6. அத்தியாயம் 6 : மனிதவளங்களின் தோற்றப்பாடு** **52-52**

6.1. பதவியணி முகாமைத்துவம் 52

6.2. பதவியணி பற்றாக்குறை அமைச்சின் செயலாற்றுகையில் தாக்கம் செலுத்தும் முறை 52

6.3. மனித வள அபிவிருத்தி 52

**7. அத்தியாயம் 07 – இயைபு அறிக்கை** **53-62**

# அத்தியாயம் 1
# நிறுவனத் தோற்றப்பாடு /அமுல்படுத்தும் பொழிப்பு

## 1.1. அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கு அமைய 2025 ஆம் ஆண்டில் 25 அமைச்சுக்கள் இயங்கிவந்தன. அதற்கமைய நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் நகர அபிவிருத்தி, வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் விடயப்பரப்புக்கள் தொடர்பான சகல நடவடிக்கைகள் மற்றும் குறித்த விடயங்களுடன் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், நியாயாதிக்க நிறுவனங்களுக்கு இந்த அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுலவரின் நிதி அதிகாரத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகினற்ன. தற்போது நகர அபிவிருத்தி விடயப்பரப்பு நீக்கப்பட்டுள்ளதுடன், வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சு என்ற வகையில் தற்போது இயங்கிவருகின்றது.

## 1.2. அமைச்சு தாபிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சட்டகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2024.11.18 ஆம் திகதியைக் கொண்ட 999/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய இந்த அமைச்சு நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு எனத் தாபிக்கப்பட்டது.

2025 அக்டோபர் மாதம் 11 ஆம் திகதிய 2457/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய இந்த அமைச்சு வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சு என புதிய அமைச்சொன்றாகத் தாபிக்கப்பட்டதுடன், 2025 அக்டோபர் 18 ஆம் திகதிய அதிவிசேட வாத்தமானப் பத்திரிகை இலக்கம் 2458/65 இற்கமைய இப்புதிய அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் 03 திணைக்களங்கள், 09 நியாயாதிக்க நிறுவனங்கள் உட்பட 12 நிறுவனங்களைக் கொண்டதாக இந்த அமைச்சு தாபிக்கப்பட்டுள்ளது.

### 1.2.1. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள், நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

**திணைக்களங்கள்**

1. கட்டிடங்கள் திணைக்களம்
2. அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம்
3. தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்

**நியாயாதிக்க நிறுவனங்கள்**

1. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
2. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
3. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
4. வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்
5. அரச பொறியியல் கூட்டுத்தாபனம் (தேசிய இயந்திர சாதன நிறுவகம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கிவருகின்றது.)
6. ஓசன் வீவ் அபிவிருத்தி (தனியார்) கம்பனி
7. இலங்கை பொறியியலாளர்களின் பேரவை
8. நிர்மாணப் பாதுகாப்பு நிதியம்

**நிகழ்ச்சித்திட்டங்கள்**

1. இடம்பெயர்ந்துள்ளவர்களை மீள்குடியேற்றும் நிகழ்ச்சித்திட்டம்

## 1.3. அமைச்சின் குறிக்கோள்கள்

அரசினால் அமுல்படுத்தப்படுகின்ற தேசிய கொள்கையின் அடிப்படையில் வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் விடயங்களுக்கு இணங்க அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள், நியாயாதிக்க நிறுவனங்களின் விடயப்பரப்புக்களுக்களுக்கு ஏற்புடையதான கொள்கைகள், உபாயமுறைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், அமுல்படுத்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வது இந்த அமைச்சின் செயற்பணியாகும்.

## 1.4. அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி

**நோக்கு**

"வசதியான வாழ்க்கை"

**செயற்பணி**

வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி, நீர் மற்றும் துப்பரவேட்பாட்டு வசதிகளுக்கான பிரவேசத்தை உறுதி செய்வதற்கான கொள்கைகளைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்துவதன் மூலம் மக்களுக்கு வசதியான இலகுவான வாழ்க்கைக்குரிய பிரவேசத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

## 1.5. அமைச்சின் பிரதான விடயத்துறைகள் மற்றும் பணிகள்

**வீடமைப்பு, நிர்மாணிப்புப் பிரிவு**

* வீடமைப்பு, நிர்மாணிப்பு விடயம் தொடர்பான கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், பின்னாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல்.
* குறைந்த வருமானம் பெறுவோர், நடுத்தர வருமானம் பெறுவோர் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் உள்ளிட்ட பொது மக்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வீடமைப்புத் திட்டங்கள், வீடமைப்பு நிதி உதவி மற்றும் கடன் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
* வீடமைப்பு அபிவிருத்தித் தேவைகளுக்கு காணிகளை இனங்காணல், காணி கொள்ளல், சாட்டுதல் செய்துகொள்ளல், நீக்கம் செய்தல் மற்றும் உறுதிகளை வழங்குவது பற்றிய நடவடிக்கைகள்.
* நிர்மாணத் தொழிலை பேணிவரத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல்.
* அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அரச திணைக்களங்கள், நிர்மாணிப்பு தொடர்பான அதிகாரசபைகளின் நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல் மற்றும் வழிகாட்டல்.
* அரசின் சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கும் நிலையான தொழில்நுட்பக் குழுக்களின் பணிகளை நிறைவேற்றல்.
* அமைச்சின் கீழுள்ள நிர்மாணிப்பு நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல்.
* அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பம்சாரா நிறுவனங்களுக்கு நிர்மாண நடவடிக்கைகளின் போது தொழில்நுட்ப வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
* நிர்மாணத்துறையுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு தொழில்வல்லுனர்களுக்கு வீசா சிபாரிசு செய்தல்.
* இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு கிராமிய வீடமைப்பு நிர்மாண நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல்.
* நிலக்கண்ணி வெடிகளை அகற்று நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ச்சியாக அமுல்படுத்தல்.

**நீர் வழங்கல் பிரிவு**

* ஒவ்வொரு பிரசைக்கும் சுத்தமான குடிநீர் பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* நீர் வழங்கல் சேவைகள், வடிகாலமைப்புக் கட்டமைப்பு மற்றும் துப்பரவேட்பாட்டு வசதிகள் பற்றி ஆராய்ந்து பற்றிய புதிய திட்டங்களைத் தயார் செய்து அமுல்படுத்தல் மற்றும் பராமரிப்பு.
* கிராமிய வாவிகள், நீர் நிலைகள் மற்றும் நீர்ப்பாசக் கட்டமைப்புக்களை ஒருங்கிணைப்புச் செய்து நீரின் பாதுகாப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டங்களை மேம்படுத்தல்.
* குடிநீர் விநியோகத்தின் போது இடம்பெறுகின்ற நீர் விரயமாவதைத் தடுத்தல்.
* சமுதாய நீர் வழங்கல் மற்றும் கருத்திட்டங்களை வினைத்திறனுடனும், முறையாகவும் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளல்.
* கிராமிய மக்களுக்கு தரமான குடிநீர் வழங்குவதற்காக சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களைப் பராமரிப்புச் செய்தல் மற்றும் மேம்படுத்தல்.
* நீர் நிலைகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக கிராமிய பிரதேசங்களில் குடிநீர் விநியோகத்தை நிலைபேறானதாக்கல்.

## 1.5. 1. அமைச்சின் கீழுள்ள பிரிவுகளும், பணிகளும்

### 1.5.1.1. நிருவாகப் பிரிவு

சாதாரண நிருவாகம் சம்பந்தமான சகல பணிகள் மற்றும் மனித வள முகாமைத்தும் முக்கிய செயற்பணியாக உள்ளதுடன், அதற்குத் தேவையான சூழலை தயார் செய்தல், பௌதீக வளங்களை விளைத்திறன்மிக்கவாறு முகாமைத்துவம் செய்தல்.

பிரதான பணிகள்

* அமைச்சின் சகல சாதாரண நிருவாக நடவடிக்கைகள் மற்றும் சகல அலுவலர்களினதும் தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
* அமைச்சரின் பதவியணி அலுவலர்களின் தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
* மனித வள அபிவிருத்தி தெடர்பான உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அலுவலர்களை ஈடுபடுத்துவது பற்றிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* கூட்டங்கள் மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்
* சுயவிபரக் கோப்பு முகாமைத்துவம்
* நிலையான சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல்
* விடயப்பரப்பு சம்பந்தமான கணக்காய்வு வினான்களுக்கு பதில் அளித்தல்
* தகவல் அறியும் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்
* வாகனம் பராமரிப்பு

### 1.5.1.2. தாபனப் பிரிவி

அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சகல தாபன நடவடிக்கைகள் மற்றும் மனிதவள முகாமைத்துவம் மற்றும் மேற்படி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**தாபனப் பிரிவின் பணிகள்**

இப்பிரிவினால் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

* பணிப்பாளர் சபையை நியமனம் செய்யும் நடவடிக்கைகள்
* வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைகள்
* சேவை நீடிப்புக்கள் தொடர்பான நடவடிக்கைகள்
* சம்பளம் மற:றும் கொடுப்பனவுகள் தொடர்பான நடவடிக்கைகள்
* ஒழுக்காற்று மற்றும் மேன்முறையீடு தொடர்பான நடவடிக்கைகள்
* பொது மக்களின் கோரிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகள்

* உள்நாட்டு, வெளிநாட்டு லீவு அங்கீகரிப்பது தொடர்பான நடவடிக்கைகள்
* அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகள்
* மேலதிக நேரம், நாள் சம்பளம், மேலதிக எரிபொருள் அங்கீகரிப்பது தொடர்பான நடவடிக்கைகள்
* செயன்முறைப் பயிற்சிக்கு அங்கீகாரம் வஙழ்கும் நடவடிக்கைகள்
* நிறுவனங்கள் தொடர்பான பல்வேறு சிக்கல்கள் பற்றிய மற்றும் அடுத்த கட்டப் பணிகள் தொடர்பாக கலந்துரையாடல்களுக்கு அழைப்பு விடுக்கும் நடவடிக்கைகள்
* நிறுவனங்களின் வாகன இறக்குமதிப் பத்திரங்களை அங்கீகரிப்பது தொடர்பான நடவடிக்கைகள்
* அலுவலர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் நடவடிக்கைகள

### 1.5.1.3. திட்டமிடல் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் திட்டமிடப்பட்டவாறு முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு வழிநடாத்துவது இப்பிரிவின் பிரதான செயற்பணியாகும். மேலும், “வளமான நாடு, அழகான வாழ்க்கை” தேசிய கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் துறையிலன் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு நிறுவனங்கள் தயார் செய்கின்ற கருத்திட்டப் பிரேரணைகளை நிதி அமைச்சினூடாக அங்கீகரித்துக்கொள்ள உதவுவதும், அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகள்**

* அமைச்சின் நோக்கு மற்றும் நோக்கங்களுக்கு ஏற்புடையவாறுக அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் செயற்றிட்டத்தைத் தயார் செய்வது தொடர்பில் உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
* அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கருத்திட்டப் பிரேரணைகளை, அமைச்சின் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு ஊடாக மதிப்பீடு செய்த பின்னர், தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதும், ஒருங்கிணைப்புச் செய்வதும்.
* அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான தகவல்களைத் தயார் செய்வதும், அறிக்கையிடுவதும்.
* கருத்திட்டங்களை பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
* அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்றிட்டங்களுக்கு அமைய முன்னேற்றத்தை மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய அறிக்கையிடல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
* அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் சம்பந்தமான அமைச்சரவை தீர்மானங்களை அமுல்படுத்துவது பற்றிய பின்னாய்வை மேற்கொள்ளல்.
* அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையை தயார் செய்து உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைப்பதற்கு சமர்ப்பித்தல்.
* வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயார் செய்து உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைப்பதற்கு சமர்ப்பித்தல்.
* முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை ஒழுங்குசெய்தல், அறிக்கைகளை தயார் செய்தல் மற்றும் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைப்பதற்கு சமர்ப்பித்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.
* வெளிநாட்டு உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களை உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.

### 1.5.1.4. வீடமைப்புப் பிரிவு

வீடமைப்புத் துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வீடமைப்பு அபிவிருத்தி துறையின் கீழ் தேசிய கொள்கைகளைத் திட்டமிடுவதற்கான தகவல்களை வழங்குதல், நாட்டின் எதிர்கால வீடமைப்புத் தேவையை இனங்கண்டு அதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், வழிநடாத்தல், பின்னாய்வு, மற்றும் அத்துறையில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டல்களைச் செய்வது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**வீடமைப்புப் பிரிவின் பிரதான பணிகள்**

➢ **கொள்கைகளை வகுத்தல்**

* நாட்டின் எதிர்கால வீடமைப்புத் தேவையை இனங்கண்டு அதற்குத் தேவையான கொள்கைகளைத் தயார் செய்வதற்கான தகவல்களை வழங்குதல்.
* வீடமைப்பு அபிவிருத்தித் துறை சம்பந்தமான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் குறிப்புக்களைத் தயார் செய்வதல்.
* வீடமைப்பு அபிவிருத்தித் துறை சம்பந்தமான சட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கான தகவல்களை வழங்குதல்.
* வீடமைப்பு அபிவிருத்தித் துறைக்கு ஏற்புடையதான கொள்கைகளை ஏனைய அரசதுறை நிறுவனங்களுடன் இணைந்து அமுல்படுத்தல் - வீடமைப்பு பற்றிய நடவடிக்கைக் குழு.

➢ **வீடமைப்பு அபிவிருத்தி**

திறைசேரியின் ஏற்பாடுகளின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பின்வரும் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும், பின்னாய்வை மேற்கொள்வதும்.

* குறைந்த வருமானம் பெறும் மக்களுக்காக நாடளாவிய ரீதியில் “தமக்குரிண இடம் - அழகான வாழ்க்கை” எனும் வீடமைப்பு உதவி நிகழ்ச்சித்திட்டம்
* யாவருக்கும் இல்லம் - உதவி தொடர்ச்சி (20215/2019) நிகழ்ச்சித்திட்டம்
* பழைய வீடமைப்புத் திட்டங்களை நவீனமயப்படுத்தல்
* நடுத்தர வகுப்பினரின் வீடமைப்புத் திட்டங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

➢ **வேறு கடமைகள்**

* உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் வீடமைப்பு விடயம் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் உலகக் குடியிருப்புத் தினத்தைக் கொண்டாடுதல்.
* ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் (ருஎ-ர்யடிவையவ) இணைந்து மேற்கொள்ளும் ஏனைய நடவடிக்கைகள்

### 1.5.1.5. தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

இப்பிரிவானது 1954 இன் 37 ஆம் இலக்க தேசிய வீடமைப்புச் சட்டம், 1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றி வருகின்றது. மேலும் 1972 இன் 7 ஆம் இலக்க வாடகைச் சட்டத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது.

**தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவின் பிரதான பணிகள்**

* வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
* அரசுக்கு சுவீகரித்துள்ள வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்தல்.
* பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகள் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்த்துவைத்தல்.

### 1.5.1.6. நிதிப் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்புடையதாகின்ற நோக்கங்களை அடைந்துகொள்ளத் தேவையான நிதி வளம் மற்றும் ஆலோசனையைப் பெற்றுக்கொடுத்தல், மேற்படி வளங்களைப் பயன்மிக்கவாறும், வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைமை பற்றி ஆலோசனை வழங்குவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**நிதிப் பிரிவின் பிரதான பணிகள்**

* வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்க நிதி முகாமைத்துவ முறைமையை அமைச்சினுள் அமுல்படுத்தல்.
* அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கான பெறுகை குழுக்களைத் தாபித்தல்.
* நிதி முகாமைத்துவம், நிதித் திட்டமிடல், வரவு செலவுத்திட்டமிடல், சொத்து முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு, முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு அறிவுரை மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
* நிதி அமைச்சுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளைப் பேணிவருதல் மற்றும் அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்ளக்கூடியவாறான நிதி வளங்களை திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொண்டு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளித்தல்.
* அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதை பிரதானமாகக் கொண்டு அந்நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்து வருடாந்த வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்தல் மற்றும் ஆண்டு முழுவதிலும் வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாட்டுடன் நடவடிக்கை மேற்கொள்ளல்.
* வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியை செலவிடும் போது உரியவாறு அறிக்கையிடல் மற்றும் மாதாந்த, வருடாந்த நிதி அறிக்கைகளை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்.
* அரச கணக்காய்வுப் பிரிவு மற்றம் உள்ளக கணக்காய்வுப் பிரிவுடன் நல்லதொரு தொடர்பைப் பேணிவருவதுடன் மேற்படி பிரிவுகளின் ஊடாக பிரேரிக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை அமுல்படுத்தல்.
* அமைச்சின் சகல பெறுகை நடவடிக்கைகளையும் முறையாக மேற்கொள்ளல்.

### 1.5.1.7. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இணை நிறுவனங்களின் உத்தேச நோக்கங்களை யதார்த்தமாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சிறந்த நிதி நிருவாகம் மற்றும் முறையான முகாமைத்துவத்தை தாபிப்பதற்கு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் நிதி நிருவாகம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்கேற்று அந்நடவடிக்கைகளை மென்மேலும் முறையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உதவுதல்.

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான பணிகள்**

* அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.
* கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சிக்கல்களை குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.
* கணக்காய்வு மற்றும் விசாரணை நடவடிக்கைகளின் மூலம் நிறுவனங்களிலுள்ள சிக்கல்களை குறைத்துக் கொள்ள உதவுதல்.
* அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மற்றும் அரச கணக்குகள் பற்றிய குழுவின் சிபாரிசுகள் மற்றும் கட்டளைகளை அமுல்படுத்துவது தொடர்பில் பின்னாய்வை மேற்கொள்ளல்.

### 1.5.1.8. நிர்மாணப் பிரிவு

இப்பிரிவானது, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம், ஓசன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி மற்றும் வரை. கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணிப்பு சம்பந்தமான பணிகளை அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்வவதை பிரதான செயற்பணியாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

**நிர்மாணப் பிரிவின் பணிகள்**

* குறித்த நிறுவனங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.
* குறித்த நிறுவனங்களின் நிதிச் சிக்கல்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்.
* நிர்மாணத் துறையை கண்காணிப்புச் செய்தல் மற்றும் மதியுரைச் சேவைகளை ஆற்றுதல். (அநுராதபுரம் மஹவிலச்சிய சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித்த நாஹிமிகம கிராமத்தை நிர்மாணிக்கும் பணிகளை துரிதப்படுத்தல் மற்றும் கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொன்க்றீட் கழிவுப்பொருள் முகாமைத்துவக் கருத்திட்டத்தை அமுல்படுத்தல்)
* மீள்குடியேற்றப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளை அவதானிப்புச் செய்தல்.
* அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயார் செய்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.
* நிபுணத்துவம்மிக்க இலங்கையர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு வெளிநாட்டு நிர்மாணத் துறையைச் சேர்ந்த விசேட நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள ஆட்களுக்கு வீசா பெற்றுக் கொள்வதற்கு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கு சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.

### 1.5.1.9. பொறியியல் சேவைகள் பிரிவு

சாதாரண கேள்வி நடைமுறையிலிருந்து விடுபட்டு நேரடியாக அரச நிர்மாண நிறுவனங்களுக்கு கையளிக்கும் கட்டிடங்கள் மற்றும் பொறியியல்சார் ஒப்பந்தங்கள் பற்றிய மதிப்பீடுகள் மற்றும் விலைமனுக்களைப் பரிசோதிப்பதற்கு மற்றும் அங்கீகரிப்பதற்கு மற்றும் திரட்டிய நிதியத்தின் கீழ் பொறுப்பேற்றுக் கொள்ளும் ஒப்பந்தங்கள் பற்றிய பிணக்குகளில் தலையீடு செய்வதற்கு இந்த அமைச்சின் கீழ் நியமனம் செய்யப்பட்ட நிலையான தொழில்நுட்பக் குழு சம்பந்தமான பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், கட்டிடங்கள் திணைக்களம் மற்றும் அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் தொடர்பான கருத்திட்ட நடவடிக்கைகள், பெறுகை நடவடிக்கைகள் உட்பட ஏனைய ஒருங்கிணைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதான பணிகள்**

* அரச நிறுவனங்களுக்கு அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய கையளிக்கப்படுகின்ற நிர்மாணிப்புக் கருத்திட்டங்களின் நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கனியஅளவைப் பத்திரங்களின் விலைமனுக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளுக்குள் உள்ளனவா என்பதை பரிசோதித்துப் பார்த்து குழுவின் அங்கீகாரத்துக்காக மீண்டும் தயார் செய்தல்.
* நிர்மாண ஒப்பந்தங்களின் மொத்த செலவின மதிப்பீட்டுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* அமைச்சுச் செயலாளரின் மற்றும் அமைச்சின் தத்துவ எல்லைக்குள் நிர்மாண ஒப்பந்தங்களின் விலை வித்தியாசங்களுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* தொழில்நுட்பம் அல்லாத அரச நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்களின் நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு அவசியமான உதவியைப் பெற்றுக் கொடுத்து ஒருங்கிணைப்புச் செய்தல்.

* தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயார் செய்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுத்தல்.
* அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம், கட்டிடங்கள் திணைக்களம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்களின் தொழில்நுட்ப மற்றும் ஏனைய பொறியியல் நடவடிக்கைகளின் கண்காணிப்பு, முன்னேற்ற மீளாய்வு மற்றும் அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்தல்.

## 1.5.1.10. நிர்மாணக் கொள்கைகள் பிரிவு

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை பொறியியலாளர்களின் பேரவையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், ஒருங்கிணைப்பு, தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், நிர்மாணத் தொழில் அபிவிருத்திக்கான ஏற்பாடுகளைச் செய்தல், தரமான மற்றும் சுற்றாடலுக்கு சாதகமான நிர்மாணத் தொழிலை உருவாக்குதவற்கு தலையீடு செய்வது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**நிர்மாணக் கொள்கைகள் பிரிவின் பணிகள்**

* நிர்மாணத்துறையின் முன்னேற்றத்திற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல்.
* நிர்மாணத்துறைக்குரிய சட்டவரைவுகள் மற்றும் சட்டங்கள் பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* தொழில்நுட்பப் பிரிவுடன் சம்பந்தப்பட்ட நிர்மாணத் தொழிலை ஒழுங்குறுத்தல் மற்றும் பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை நிர்மாணத் தொழிலின் முன்னேற்றத்திற்கு வழிப்படுத்தல்.
* நிர்மாணத்துறைக்குத் தேவையான ஊழியப்படையை தயார்படுத்த செயற்படுத்தல்.
* தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயார் செய்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு சிபாரிசுகளை வழங்குதல்.
* நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் ஏனைய தொழில்நுட்ப நடவடிக்கைகளை அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்தல்.
* இலங்கை பொறியிலாளர்களின் பேரவையின் தொழில்நுட்ப நடவடிக்கைகளை அமைச்சு மட்டத்த்தில் ஒருங்கிணைப்புச் செய்தல்.

## 1.5.1.11. கட்டிடக்கலைகள் பிரிவு

அமைச்சுக்கு நேரடியாக சாட்டுதல் செய்யப்படுகின்ற நிர்மாணக் கருத்திட்டங்களுக்கும், அமைச்சிடமிருந்து வேறு அரச நிறுவனங்கள் வீடமைப்புக் கருத்திட்டங்களுக்கு உதவி கோரும் சந்தர்ப்பங்களில் தரமான, முறையான கட்டிடக்கலைத் திட்டங்களை தயார் செய்தல், நிர்மாணக் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் அவற்றின் முன்னேற்றத்தை அவதானிப்புச் செய்வது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**கட்டிடக்கலைகள் பிரிவின் பணிகள்**

* வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டள்ள திட்டங்கள் மற்றும் மற்றும் நிர்மாணக் கருத்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் கட்டிடச் சூழலுக்கு (டீரடைவ நுெளைழஅநவெ) ஏற்புடைய திட்டங்கள் மற்றும் மதியுரைச் சேவைகளை வழங்குதல்.
* கட்டிடக் கலை திட்டங்கள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அமைச்சின் கீழுள்ள குறித்த நிறுவனங்களின் முன்னேற்ற மீளாய்வை மேற்கொள்ளல்.

* வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை தொடர்பான வழிகாட்டல் மற்றும் கொள்கைகளை தயார் செய்யத் தேவையான கட்டிடக் கலை மதியுரைப் பங்களிப்பை வழங்குதல்.

* அரசாங்க கட்டிட ஒழுங்குவிதிகள், பாதகாப்பு தரநியமங்களுக்கு அமைய உரிய இலக்கு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட தர நியமங்களுக்கு இணங்கியதாக உள்ளது என்பதை உறுதி செய்வதற்கு திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் கட்டிடக் கலைப் பிரிவின் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.

### 1.5.1.12. இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டம்

இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களை மீளக் குடியேற்றுவது தொடர்பாக 2009 முதல் 2025 டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்குள் வட மாகாணத்தில் 185,775 குடும்பங்களைச் சேர்ந்த ஆட்கள் 580,913 பேரும், கிழக்கு மாகாணத்தில் குடும்பங்கள் 91,392 இற்கு உரித்தான ஆட்கள் 338,537 பேரும் என்ற வகையில் மொத்தமாக 277,167 குடும்ப்ங்களுக்கு உரித்தான ஆட்கள் 919,450 பேரை மீளக் குடியமர்த்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலுமாயிற்று.

மோதல் சூழல் காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் கருத்திட்டம் மற்றும் மீளக் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களுக்கு அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுக்கும் கருத்திட்டங்களும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் கருத்திட்டமும் தற்போது இந்த அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

- **இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு செங்கல் மற்றும் சாந்துபூசப்பட்ட நிரந்தர வீடுகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

இந்த வீடமைப்புக் கருத்திட்டம் பயனாளிகளினாலேயே நிர்மாணித்துக் கொள்வதன் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 08 மாவட்டங்களில் 1827 வீடுகளை நிர்மாணிப்பது ஆரம்பிக்கப்பட்டதுடன், இவற்றில் 1713 வீடுகள் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், கடந்த ஆண்டுகளின் தொடர்ச்சியான 328 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளும் நிறைவு செய்யப்பட்டன. அதற்கமைய 2041 வீடுகள் இந்த ஆண்டில் நிர்மாணித்து முடிக்கப்பட்டன.

- **மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டங்கள்**

2025 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்தின் கீழ் 5389 குடும்பங்களுக:கு குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டதுடன் 2669 குடும்பங்களுக்கு வீட்டு மின்சார இணைப்பு வழங்கப்பட்டது. 08 மாவட்டங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ளக வீதிகள் 179 ஐ நிர்மாணிப்பதும் நிறைவு செய்யப்பட்டுள்ள

## 1.6. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு



## 1.7. வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்கள்

### 1.7.1. வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு

| தொ.இ ல. | கருத்திட்டத்தின் பெயர் | பங்களிப்பு முகவராண்மை நிறுவனம் | கருத்திட்டக் காலஎல்லை | கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.) |
|---|---|---|---|---|
| 01 | சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித்த தேரர் வீடமைப்புக் கருத்திட்டம் | இந்திய உதவி மற்றும் இலங்கை திறைசேரியின் நிதி | 08 வருடம் | 450.50 |
| 02 | மன்னார் மடுமாதா தேவாலயக் கருத்திட்டம் | இந்திய உதவி மற்றும் இலங்கை திறைசேரியின் நிதி | 08 வருடம் | 416.88 |
| 03 | கிராம சக்தி வீடமைப்புக் கருத்திட்டம் - நாடளாவிய | இந்திய உதவி மற்றும் இலங்கை திறைசேரியின் நிதி | 08 வருடம் | இந்திய உதவி - 300.00 இலங்கை திறைசேரி - 60.00 |
| 04 | கிராம சக்தி வீடமைப்புக் கருத்திட்டம் - 2017 தென் மாகாணம் - I | இந்திய உதவி மற்றும் இலங்கை திறைசேரியின் நிதி | 08 வருடம் | இந்திய உதவி - 300.00 இலங்கை திறைசேரி - 60.00 |
| 05 | கிராம சக்தி வீடமைப்புக் கருத்திட்டம் - வட மாகாணம் | இந்திய உதவி மற்றும் இலங்கை திறைசேரியின் நிதி | 08 வருடம் | இந்திய உதவி - 300.00 இலங்கை திறைசேரி -60.00 |
| 06 | கிராம சக்தி வீடமைப்புக் கருத்திட்டம் - 2019 தென் மாகாணம் - II | இந்திய உதவி மற்றும் இலங்கை திறைசேரியின் நிதி | 08 வருடம் | இந்திய உதவி - 300.00 இலங்கை திறைசேரி -60.00 |

### 1.7.2. நீர் வழங்கல் பிரிவு

| தொ.இ ல. | கருத்திட்டத்தின் பெயர் | பங்களிப்பு முகவராண்மை நிறுவனம் | கருத்திட்டக் காலஎல்லை | கருத்திட்டத் தின் மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.) |
|---|---|---|---|---|
| 01 | பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் -II | ஆசிய அபிவிருத்தி வங்கி | 2014 செப்தெம்பர் முதல் 2026 யூன் வரை | 14,124.00 |
| 02 | பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- III | ஆசிய அபிவிருத்தி வங்கி | 2016 நவம்பர் முதல் 2026 யூன் வரை | 7,222.00 |
| 03 | அம்பதலே நீர் வழங்கல் கட்டமைப்பை மேம்படுத்தும் மற்றும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் | AFD - France | 2016 யூன் முதல் 2026 யூன் வரை | 13,000.00 |

| தொ ா.இ ல. | கருத்திட்டத்தின் பெயர் | பங்களிப்பு முகவராண்மை நிறுவனம் | கருத்திட்டக் காலஎல்லை | கருத்திட்டத் தின் மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.) |
|---|---|---|---|---|
| 04 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்பரவேட்பாட்டுக் கருத்திட்டம் | ஆசிய அபிவிருத்தி வங்கி | 2011 ஆகஸ்ட் முதல் 2029 டிசம்பர் வரை | 35,881.49 |
| 05 | அநுராதபுரம் வழக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் - I ஆம் கட்டம | யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் | 2014 யூலை முதல் 2025 யூலை வரை | 11,515.00 |
| 06 | அநுராதபுரம் வழக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் - II ஆம் கட்டம | யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் | 2018 மே முதல் 2031 யூன் வரை | 31,598.00 |
| 07 | களுகங்கை நீர் வழங்கலை விஸ்தரிக்கும் கருத்திட்டம் - I | யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் | 2020 டிசம்பர் முதல் 2029 டிசம்பர் வரை | 73,307.00 |
| 08 | ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் I<br><br>ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் - II | EDCF கொரிய வங்கி | 2019 டிசம்பர் முதல் 2026 மார்ச் வரை<br>2024 யூலை முதல் 2028 செப்தெம்பர் வரை | 6,291.00 (USD 25.546 Mn + Rs. 2,147 Mn.) |
| 09 | கண்டி வடக்கு பாததும்பர இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | சீனா அபிவிருத்தி வங்கி | 2019 ஆகஸ்ட் முதுல் 2027 யூலை வரை | 57,980.00 |
| 10 | பாலி ஆறு நீர் வழங்கல் கருத்திட்டம் (பாரிய யாழ்ப்பாணம்) | GOSL | 2024 சனவரி முதல் 2031 செப்தெம்பர் வரை | 116,665.05 |
| 11 | கிரிபாவ, எப்பாவல, ராஜாங்கனய, நொச்சியாகம இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் I | | 2025 நவம்பர் முதல் 2029 டிசம்பர் வரை | 32,211.13 |
| 12 | கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் | யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) | 2010 யூலை முதல் 2027 ஆகஸ்ட் வரை | 22,588.00 |
| 13 | இரத்மலான / மொரட்டுவ பிரதேசங்களில் குழாய் மூலம் மலசல கழிவகற்றலை மேம்படுத்தும் கருத்திட்டம் | AFD /GoSL | 2016 யூலை முதல் 2026 டிசம்பர் வரை | 5,548.00 |
| 14 | கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவங்கொட இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | சீனா அபிவிருத்தி வங்கி /இலங்கை வங்கி | 2017 பெப்ருவரி முதல் 2026 செப்தெம்பர் வரை | 33,060.00 |
| 15 | அளுத்கம, மதுகம, அகலவலத்த இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | ஏற்றுமதி இறக்குமதி வங்கி - இந்தியா /இலங்கை வங்கி | 2017 மே முதல் 2026 யூன் வரை | 32,272.73 |
| 16 | தம்புத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டம் | சீனா அபிவிருத்தி வங்கி /இலங்கை வங்கி | 2018 யூலை முதல் 2026 செப்தெம்பர் வரை | 15,840.67 |

| தொ.இல. | கருத்திட்டத்தின் பெயர் | பங்களிப்பு முகவராண்மை நிறுவனம் | கருத்திட்டக் காலஎல்லை | கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.) |
|---|---|---|---|---|
| 17 | பொல்கஹவெல, பொதுஹெர, அளவ்வ இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | ஏற்றுமதி இறக்குமதி வங்கி - இந்தியா /இலங்கை வங்கி | 2017 யூலை முதல் 2026 யூன் வரை | 20,207.80 |
| 18 | கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் - 1 | உள்நாட்டு வங்கிக் கடன் - இலங்கை வங்கி | நிறைவு செய்யப்பட்டது (10.02.2020) | 5,170.00 |
| 19 | கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் - 2 | உள்நாட்டு வங்கிக் கடன் - இலங்கை வங்கி | 2025 சனவரி | 4,823.00 |
| 20 | கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் - 3 | உள்நாட்டு வங்கிக் கடன் - இலங்கை வங்கி | நிறைவு செய்யப்பட்டது (28.07.2020) | 8,043.25 |
| 21 | வில்கமுவ நீர் வழங்கல் கருத்திட்டம் | உள்நாட்டு வங்கிக் கடன் -தேசிய அபிவிருத்தி வங்கி (NDB) | ஆரம்ப ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டது. பொதி 1 இன் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சனவரி 2026 | 3,580.00 |
| 22 | லக்கல புதிய நகர நீர் வழங்கல் கருத்திட்டம் | உள்நாட்டு வங்கிக் கடன் - ஹட்டன் நெசனல் வங்கி | 2016 யூலை முதல் 2025 டிசம்பர் வரை | 4,496.00 |
| 23 | மாத்தறை கட்டம் IV | NDB/ GOSL | 2017 அக்டோர் முதல் (2023 சனவரி மாதம் மூல உடன்படிக்கை பரஸ்பரம் முடிவுறுத்தப்பட்டது) | 18,208.00 |
| 24 | நீர் வழங்கல், துப்பரவேட்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் | உலக வங்கி | 2015 டிசம்பர் முதல் 2026 மார்ச் வரை | 52,345.00 |

## 1.8. அமைச்சின் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள்

- **தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இலங்கையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படை வசதிகளைக் கொண்ட வசதியான – சுகாதார ரீதியில் பாதுகாப்பான வீட்டைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இதன் போது தொடர்மாடி வீடுகள், வீடு அல்லது வேறு வாசஸ்தலங்கள் / கட்டிடங்களை நிர்மாணித்தல், வீட்டுப் பற்றாக்குறையை குறைப்பதற்காக வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களைத் தயார் செய்தல், சேரி மற்றும் குடிசைகளைக் கொண்ட பிரதேசங்களை மீள்அபிவிருத்தி செய்தல் போன்ற அடிப்படைப் பணிகளுக்கு மேலதிகமாக வீடமைப்பு அபிவிருத்தி தொடர்பான செயற்பணியையும் நிறைவேற்றி வருகின்றது.

கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகம், பிரதிப் பொது முகாமையாளர் பிரிவுகள் 07, உதவிப் பொது முகாமையாளர் பிரிவு 01 மற்றும் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பிரிவு மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அலுவலகங்கள் 25, நகர அலுவலகங்கள் 03 மற்றும் வலய மற்றும் உப அலுவலகங்கள் 08 ஐ உள்ளடக்கியதாக அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர் வழங்கல் விடயப்பரப்பின் கீழான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் நிறுவனமாகும். 1974 இன் 02 ஆம் இலக்க சட்டம் மூலம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தாபிக்கப்பட்டுள்ளது.

நகர மற்றும் பகுதியளவில் நகரப் பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் குழாய் மலசல அகற்றல் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்குள்ள பிரதான நிறுவனமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை உள்ளது. தற்போது நாடு முழுவதையும் உள்ளடக்கியதாக அமுல்படுத்தப்பட்டுள்ள பாரியளவிலான மற்றும் சிறியளவிலான நீர் வழங்கல் திட்டங்களின் மூலம் 2025 ஆம் ஆண்டின் இறுதியளவில் சனத்தொகையில் 51.2% ஆனவர்களுக்கு வீட்டு குழாய் நீர் வசதிகளை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பெற்றுக் கொடுத்துள்ளது. மேற்படி வீட்டு குழயா் நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை சுமார் 2.97 மில்லியன் ஆகும். இவற்றில் 2025 ஆம் ஆண்டில் மாத்திரம் வீட்டுக் குழாய் நீர் இணைப்புக்கள் 92,837 வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக வணிகக் கைத்தொழில் மற்றும் நிறுவனம்சார் மட்டத்திலான நிறுவனங்கள் 274,631 இற்கு இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டில் 16,622 வழங்கப்பட்டன.

- **தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்**

2014/09/22 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2014/09/19 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கிராமியப் பிரதேசங்களில் வாழும் மக்கள் உட்பட குடிநீர் மற்றும் துப்பரவேட்பாட்டு வசதிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன், தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் தாபிக்கப்பட்டது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சேவைகள் வழங்கப்படாதுள்ள பிரதேசங்கள் தொடர்பாக இத்திணைக்களம் முக்கிய கவனம் செலுத்துகின்றது.

நிலைபேறான சமுதாய நீர்க் கருத்திட்டங்கள் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு சமுதாய நீர் வழங்கல் திட்டங்களை அபிவிருத்தி செய்தல், திணைக்களத்தின் கொள்ளளவை அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பாக சகல தரப்பினர்களினதும் நல்லதொரு பங்கேட்புடன் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் அமுல்படுத்த இத்திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்கின்றது.
கிராமிய நீர் வழங்கல் தொடர்பாக சகல அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தேசிய கொள்கைகளை வகுப்பதற்கு அமைச்சருக்கு உதவுதல் மற்றும் அவற்றை இற்றைப்படுத்தல், நியாயமான நீர் கட்டணத்தை விதித்தல், சமுதாய அடிப்படையிலான நீர் வழங்கல் அமைப்புக்கள் பின்பற்ற வேண்டிய தகவுதிறன்களை தயார் செய்தல் மற்றும் அதனைப் பேணிவருதல், சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் வழங்குகின்ற சேவைகளை விளைதிறனும், வினைத்திறனும்மிக்கவாறு பேணிவருவதற்கான யாப்புக்கள், சுற்றறிக்கைகள் மற்றும் உடன்படிக்கைகளைத் தயார் செய்வது போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**

1957 இன் அரச கைத்தொழில் மற்றும் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகமானது (ஐஊவுயுனு-ஐளெவவைரவந கழச ஊழளெவசரஉவழைெ வுசயமைைெ யனெ னுநளஎடழிஅநவெ) 1986 முதல் பல தசாப்த காலமாக நிர்மாணத் துறையை கட்டியெழுப்புவதற்குப் பாரியளவில் பங்களிப்பு வழங்கியுள்ளது. இதனை அடுத்து நிர்மாணத் தொழில் ஒழுங்குறுத்தல் நிறுவனம் மற்றும் ஐஊவுயுனு இன் சட்ட பூர்வமான நிறுவனமாக 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்த நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையாகத் (ஊஐனுயு) தாபிக்கப்பட்டது. நிர்மாணக் கைத்தொழிலுக்கான கொள்கைகளைத் தயார் செய்தல், ஒப்பந்ததாரர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினர்களைப் பதிவு செய்தல், நிர்மாணத் தொழில் சம்பந்தமான அங்கீகரிக்கப்பட்ட விலைமனு ஆவணங்கள் மற்றும் வகைப்படுத்தல்களைத் தயார் செய்தல், நிர்மாணத் தொழில் கலைஞர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் பதிவு செய்தல், நிர்மாணத் தொழிலின் பிணக்குகள் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தலையீடு செய்தல் மற்றும் அவசியமான வசதிகளை செய்துகொடுப்பது இந்த நிறுவனத்தின் பிரதான பணியாகும்.

- **அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம்**

அரசாங்க வேலைகள் திணைக்களத்தின் உப திணைக்களமொன்றாக 1849 ஆம் ஆண்டு கொழும்பு கேஸ்சந்தி வீதியில் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் பிற்காலத்தில் அதாவது 1928 ஆம் ஆண்டு முதல் கொலன்னாவ தெமட்டகொட வீதியில் பெற்றோலியக் கட்டிடத் தொகுதிக்கு அருகே அமைந்துள்ளது.

ஆரம்ப காலத்தில் வீதிகள், பாலம், பெருந்தெருக்கள், கட்டிடங்களை நிர்மாணித்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யப் பங்களிப்பு வழங்கியுள்ளதுடன் வெளிநாட்டு பொறியியலாளர்கள் இந்த நிறுவனத்தை வழிப்படுத்தியுள்ளார்கள்.

1969 வரை இவ்வாறு இயங்கிவந்துள்ள அரசாங்க வேலைகள் திணைக்களம் அதன் மூலம் நிறைவேற்றப்பட்ட பெருந்தெருக்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு மற்றும் கட்டிடங்களை நிர்மாணித்தலும், பராமரிப்பும் போன்ற சிவில் பொறியியல்சார் பணிகளுக்கு பெருந்தெருக்கள் திணைக்களம் மற்றும் கட்டிடங்கள் திணைக்களமும், இயந்திரப் பொறியியல் பணிகளை நிறைவேற்றுவதற்கான “ஏ” தரத்தைச் சேர்ந்த திணைக்களமாக அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களமும் 1971.01.10 ஆம் திகதி தாபிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் கைத்தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பு வழங்கி புத்தாக்கம், திறன் அபிவிருத்தி மற்றும் நுகர்வோருக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் உயர் தரத்தைக் கொண்ட இயந்திரப் பொறியியல்சார் மற்றும் உற்பத்தித் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது இதன் பிரதான செயற்பணியாகும்.

- **கட்டிடங்கள் திணைக்களம்**

அரசாங்க வேலைகள் திணைக்களத்தின் (ஈறுனு) கீழ் இயங்கிவந்த கட்டிடங்கள் திணைக்களம் 1969 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதுடன், சுமார் 5 தசாப்த காலமாக கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு பொறுப்புக்கூறும் சுயாதீன நிறுவனமாக இயங்கிவருகின்றது. இந்தத் திணைக்களம் கட்டடிடங்கள் மற்றும் அதுசார்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் துறையில் பூரண அதிகாரத்தைக் கொண்ட மதியுரை நிறுவனமாகும். தொழில்நுட்பப் பொறுப்பு, தரம், சிக்கனம், எதிர்பார்க்கும் தரஅம்சங்கள் மற்றும் நிலைபேறான தன்மையை அடைந்துகொண்டு தமது சேவை பெறுநர்களை பூரணமாக திருப்தியுறச் செய்வதற்காக பல்வெறு தொழில்சார் திறமைகள், மேலும், பணிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற தொழில்வல்லுனர்களினால் கட்டிடக்கலைசார் மற்றும் பொறியியல்சார் ஆக்கங்கள், நிர்மாணிப்பு, பராமரிப்பு, கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப மதியுரை வழங்குவதன் மூலம் அரச துறையில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் பணிகளை மேம்படுத்துவதற்காக சிறந்த சேவையை வழங்குவது இத்திணைக்களம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

- **அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம்**

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம், அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1962 இல் தாபிக்கப்பட்டதுடன், ஊஐனுயு இன் ஊளு1 வகைப்படுத்தலைக் கொண்ட அரசதுறை பொறியியல் அமைப்பொன்றாகும். இந்த நிறுவனம் தனியார் துறையில் ஒப்பந்தம் மற்றும் அரச துறையில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகாரசபைகள் போன்ற அரசின் ஒப்பந்தங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிறுவனம் ISO 9001:2008 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளதுடன். கட்டிடங்கள் நிர்மாணிப்பு, சிவில் பொறியியல்சார் மற்றும் கட்டிடக்கலைசார் நடவடிக்கைகள், மதியுரைச் சேவைகளை வழங்குதல், இயந்திர மற்றும் மின்னியல் பொறியியல் சேவைகளை வழங்குதல், வீதிகள், பாலங்களை நிர்மாணித்தல் போன்ற பணிகளை நிறைவேற்றி வருகின்றது.

- **வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்**

கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் 1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரச வணிகக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் கௌரவ வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை முன்னாள் அமைச்சரினால் 1971.06.17 ஆம் திகதிய 14962/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட கட்டளை மூம் அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதுடன் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1992.09.16 ஆம் திகதிய கம்பனிகள் இலக்கம் ே (டீஎ.்.ஊபுட) 155 இன் கீழ் பதிவு செய்துள்ளது.

1987 இன் 23 ஆம் இலக்க அரச கூட்டத்தாபன அல்லது அரசுக்கு உரித்தான தொழில்முயற்சி நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றியமைக்கும் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனமாக 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ீட 1536 ஆம் இலக்கத்திற்கு அமைய 2010.03.03 ஆம் திகதி கம்பனியாக மாறியதுடன், 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(3) (டி) ஆம் இலக்கத்தின் கீழ் 2012.01.24 ஆம் திகதி முதல் வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனமான மாற்றம் பெற்றது.

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் தற்போது அரச மற்றும் தனியார் துறை மற்றும் தனியார் வீடுகளை நிர்மாணிப்பவர்களுக்குத் தேவையான சகல வகையிலுமான கட்டிடப் பொருட்கள், கட்டிடப் பொருட்கள் கைத்தொழிலுக்குத் தேவையான இயந்திரசானங்கள் மற்றும் உபகரணங்கள், கருவிகள் மற்றும் ஏனைய அம்சங்களை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பு 12 இல் அமைந்துள்ள தலைமை விற்பனைக் கிளை உட்பட நாடு முழுவதிலும் அமைந்துள்ள 16 கிளை அலுவலகங்களைக் கொண்டதாக நிறுவனம் செயற்பட்டு வருகின்றது. தலைமை அலுவலகத்தின் 17 பிரிவுகளில் ஊழியர்கள் 83 பேர் சேவையாற்றி வருகின்றார்கள் என்பதுடன், 16 விற்பனைக் கிளைகளில் ஊழியர்கள் 109 பேர் சேவையாற்றி வருவதுடன். மொத்தமாக ஊழியர்கள் 192 பேரைக் கொண்டதாக இது இயங்கிவருகின்றது.

- **ஓசன்வீவ் அபிவிருத்தி (தனியார்) கம்பனி**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பங்கு மூலதனத்தைக் கொண்டதாக, 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிப் பதிவுச் சட்டத்தின் கீழ் தனியார் கம்பனியொன்றாக 1994 யூலை மாதம் 13 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டு ஓசன் வீவ் டிவலப்பர்ஸ் தனியார் கம்பனி தாபிக்கப்பட்டதுடன், பின்னர் இது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் பதிவுச் சட்டத்தின் கீழ் 2010 சனவரி மாதம் 25 ஆம் திகதி மீள் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆதன அபிவிருத்தி மற்றும் ஆதன விற்பனை, ஓசன் ரவர் கட்டிடத்தை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதன் வீடுகளை வாடகை அடிப்படையில் வழங்குதல், மூலதனப் பங்காளர்களுக்கு இலாபப் பகிர்வு வழங்குவது இந்த நிறுவனத்தின் பணிகளாகும்.

- **இலங்கை பொறியியலாளர் பேரவை**

2017 இன் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியலாளர் பேரவை சட்டத்தின் கீழ் இலங்கை பொறியியலாளர் பேரவை (நுஊளுடு) தாபிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ்,

* பொறியியல் தொழில்வல்லுனர்களின் தொழில்சார் அந்தஸ்து மற்றும் நடத்தைகளைப் பேணிவருதல் மற்றும் வழிப்படுத்தும் பொறுப்புக்கும்,
* பொறியியல் தொழில்வல்லுனர்களைப் பதிவு செய்வதற்கும்,
* அதனுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் விளைவாய்ந்தன்மை வாய்ந்த விடயங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் இலங்கைப் பொறியியலாளர் பேரவைக்கு தத்துவமளிக்கப்படுகின்றது.

சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற, உள்நாட்டில் உரிய தரம், திறமை மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு தொழில்சார் அர்ப்பணிப்பைப் பேணிவருதல் மற்றும் சட்டரீதியாக பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு இணங்க இலங்கையில் பொறியியலாளர்களான தொழில்வல்லுனர்களை பல்வேறு வகுதிகளின் கீழ் பதிவு செய்வது இந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- **நிர்மாணப் பாதுகாப்பு நிதியம்**

1988 இன் அமைச்சரவை விஞ்ஞாபனம் 116 மூலம் நிர்மாணத்துறையின் முன்னெற்றத்தில் தடை ஏற்படுத்தும் பின்வரும் 04 முக்கிய விடயங்கள் இனங்காணப்பட்டன.

1. பலவீனமான ஒப்பந்த முகாமைத்துவம்
2. தொடர்ச்சியாக வேலைகள் கிடைக்காமை
3. தொழில் வழங்குனரின் கொடுப்பனவுகள் தாமதமடைதல்
4. நிர்மாணப் பணிகளின் போது தேவையான நிதி வசதிகள் கிடைக்காமை.

மேலே 4 ஆவது விடயம் தொடர்பாக ஆழமாக ஆராயப்பட்டது. இதன் பொது ஒப்பந்ததாரர் இதுவரை பிணை பெற்றுக் கொண்ட வணிக வங்கியின் அபாயத்தை குறைப்பதற்காக 100% முதல் 200% வரையான பாதுகாப்புப் பிணை கோரப்பட்டதனால், இலங்கைக்கு பொருத்தமான மற்றும் தனித்துவமான முறையியலை தயார் செய்வதற்காக அரசினால் 1999 இன் தேசிய வரவு செலவுத்திட்டம் மூலம் பாராளுமன்றம் நிர்மாணப் பாதுகாப்பு நிதியம் எனும் நிறுவனத்தை தாபிக்கவென ரூ.மி. 100 ஆன தொகையை ஒதுக்கி, அதன் பொறுப்பை திறைசேரி செயலாளரிடம் கையளித்தது. அதற்கமைய திறைசேரியின் செயலாளர் நிதியமாக நிர்மாணப் பாதுகாப்பு நிதியைத் தாபித்து அதன் முகாமைத்துவத்துக்கு பூரண அதிகாரத்தை அரச மற்றும் தனியார் துறையை உள்ளடக்கிய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிடம் கையளித்தார். உத்தேச ரூ.மி. 100 இல் 2005 ஆம் ஆண்டளவில் சுமார் ரூ.மி. 55 கிடைத்ததுடன், இதன் பின்னர் திரட்டிய நிதியம் அல்லது வேறு நிதிகளிலிருந்து எந்தவொரு நிதியும் கையளிக்கப்படவில்லை. அன்று முதல் இன்று வரை அவ்வாறு கிடைத்த ஒட்டுமொத்த வருமானம் மூலம் மாதிரம் பேணிவருவதுடன். பிணையை நிதியாக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

# அத்தியாயம் 2

# 2025 முன்னேற்றம் மற்றும் 2026 எதிர்கால நோக்கு (பிரிவு அடிப்படையில்)

## 2.1. நிருவாகப் பிரிவு

### 2.1.1 சுயவிபரக் கோப்புகளின் முகாமைத்துவம்

இந்த அமைச்சு சம்பந்தமான சகல அலுவலர்களினதும் சுயவிபரக் கோப்பு நடவடிக்கைகள் அதாவது வருடாந்த சம்பள ஏற்றங்களைப் பெற்றுக் கொடுத்தல், சேவையில் நிரந்தரமாக்குதல், பதவி உயர்வு, இடமாற்றம், பதில் கடமையாற்றுவதற்கு நியமனம் செய்தல் மற்றும் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுறுத்தல் போன்ற நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.2. தாபனப் பிரிவு

### 2.2.1. அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்

2025 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிருவாகப் பிரிவினால் 37 அமைச்சரவைத் தீர்மானங்கள் வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. மேலும் இந்த அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட 02 பாராளுமன்ற வினாக்கள் தொடர்பான விடைகளை அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முறையாக உரியவாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

### 2.2.2. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள், ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் 2025

வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கீழ் இணைப்புச் செய்யப்பட்டள்ள நிறுவனங்களின் செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| திணைக்களம் / நிறுவனம் | 2025 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கைகள் | 2025 ஆம் அண்டில் ஆயத்தப்படுத்தப்படுகின்ற செயலாற்றுகை அறிக்கைகளின் நிலைமை |
|---|---|---|
| கட்டிடங்கள் திணைக்களம் | 2023 | 2023 செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைப்பதற்கு அனுப்புவதற்கு 13 அச்சுப் பிரதிகள் மற்றும் 02 இருவட்டுக்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. |
| | 2024 | பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைப்பதற்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. |
| அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் | 2024 | பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைப்பதற்காக அனுப்பு ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. |

| திணைக்களம் / நிறுவனம் | 2025 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கைகள் | 2025 ஆம் அண்டில் ஆயத்தப்படுத்தப்படுகின்ற செயலாற்றுகை அறிக்கைகளின் நிலைமை |
|---|---|---|
| நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | 2023 | அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வருடாந்த அறிக்கைகளின் 03 அச்சுப் பிரதிகள், 03 இருவட்டுக்கள், பொழிப்பு அறிக்கை ஆகியன நிருவாகப் பிரிவிடம் 2025.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| ஓசன்வீவ் டிவலொப்மன்ட் பிரைவட் லிமிடட் | 2023 | பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைப்பதற்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. |
| | 2024 | அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்குமாறு நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 2019 | அமைச்சரவை விஞ்ஞாபனம் 2025.02.18 ஆம் திகதி அமைச்சரவை அலுவலகத்திற்கு நிருவாகப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| இலங்கை பொறியியலாளர் பேரவை | 2023 | அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவிலிருந்து உள்நாட்டுப் பயிற்சிக்கு 01 உம், வெளிநாட்டுப் பயிற்சிக்கு 04 பேரும் அனுப்பப்பட்டுள்ளார்கள். அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களிலிருந்து வெளிநாட்டுப் பயிற்சிகள் 13 இற்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

### 2.2.4. பொது மக்களின் கோரிக்கைகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

2025 ஆம் ஆண்டு தொடர்பில் சனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்திடமிருந்து நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவுக்கு மக்களின் 77 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் ஊழியர்களின் தாபன சிக்கல்கள் மற்றும் தொழில்சார் சிக்கல்கள் தொடர்பில் 66 கடிதங்கள் கிடைத்துள்ளதுடன், மேற்படி கடிதங்கள் நேரடியாக உரிய நிறுவனத்தின் விடயப்பொறுப்பு அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன், கிடைக்கின்ற விடைக்கு அமைய விண்ணப்பதாரிகளை அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் வீடமைப்புத் துறை தொடர்பான 11 கோரிக்கைகள் பொது மக்களிடம் கிடைத்துள்ளதுடன், மேற்படி கடிதங்கள் அடுத்தகட்டப் பணிகளுக்காக வீடமைப்புப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.2.5. தகவல் அறியும் சட்டத்தை அமுல்படுத்தல்

2025.10.08 ஆம் திகதிக்கு தகவல் அறியும் சட்டம் தொடர்பான 35 கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இப்பிரிவினால் நேரடியாக 16 தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. வேறு நிறுவனங்களிடம் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை 16 ஆகும். அமைச்சுக்கு தகவல் வழங்கப்பட்ட எண்ணிக்கை 03 ஆகும்.

## 2.2.6. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் மனிதவள முகாமைத்துவம்

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் 2025 ஆம் ஆண்டுக்கான மனிதவள ஈடுபடுத்தல்கள் பற்றிய முக்கிய புள்ளி விபரங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| நிறுவனம் | பணிப்பாளர் சபை | | பதவியணி | | |
|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 3 மாதங்களுக்கும் மேல் வெற்றிடமாக உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை | 3 மாதங்களுக்கும் மேல் வெற்றிடமாக உள்ள எண்ணிக்கை | |
| | | | | பதவிநிலை | பதவிநிலை அல்லாத |
| கட்டிடங்கள் திணைக்களம் | ஏற்புடையதல்ல | | 638 | 153 | |
| வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் | 07 | 02 | - | - | - |
| தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 07 | - | 1570 | 118 | 561 |
| ஓசன்வீவ் டிவலொப்மன்ட் பிரைவட் லிமிடட் | 10 | 01 | 55 | 03 | 05 |
| அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் | ஏற்புடையதல்ல | | 768 | 17 | 264 |
| நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | 14 | - | 390 | 55 | 93 |
| இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 7 | 01 | 2344 | 327 | 1519 |

## 2.2.7. 2026 எதிர்கால நோக்கு

இப்பிரிவின் பணிகளை விளைதிறனுடனும், வினைத்திறன்மிக்கதாகவும் பேணிவரத் தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## 2.3. திட்டமிடல் பிரிவு

## 2.3.1. வருடாந்த செயற்றிட்டம்

அரச நிதிச் சுற்றறிக்கை இல. 02/2020 இற்கமைய 2025 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் இடைக்கால ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு அமைய தயார் செய்யப்பட்ட வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை சம்பந்தமான வருடாந்த செயற்றிட்டம், 2025 சனவரி 06 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அதன் பிரதிகள் தேசிய கணக்காய்வு அலுவலகம் உட்பட சகல தரப்பினர்களிடமும் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் 2025 மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து ஆண்டின் அடுத்துவரும் 03 காலாண்டுகளுக்குமாக தயார் செய்யப்பட்ட வருடாந்த செயற்றிட்டம் 2025 மே மாதம் தேசிய கணக்காய்வு அலுவலகம் உட்பட உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த செயற்றிட்டம் உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

### 2.3.2. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்

வருடாந்த செயற்றிட்டத்திற்கு அமைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை முறையாக அமுல்படுத்துவதை கண்காணிப்புச் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான 12 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 2.3.3. கருத்திட்ட அறிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்

2025 ஆண்டில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை 17 ஆகும் என்பதுடன், MNPEA/02/2019 சுற்றறிக்கைக்கு அமைய மேற்படி கருத்திட்டப் பிரேரணைகள் அனைத்தும் ஆரம்ப மதிப்பீட்டு நடவடிக்கைகளின் பின்னர் மேலதிக மதிப்பீடு, சிபாரிசு செய்தல் மற்றும் அங்கீகரித்தல் போன்ற பணிகளுக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து 08 கருத்திட்டங்களுக்கு சிபாரிசுகள் கிடைத்ததுடன், அவற்றை அமுல்படுத்துவதற்காக உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

### 2.3.4. முன்னேற்றத்தை அறிக்கையிடல்

2025 ஆண்டில், சனாதிபதி செயலகத்திற்கு அமைச்சின் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் 04 சந்தர்ப்பங்களில் MPMS (Ministry performance Monitorig System) முறைமை ஊடாக சமர்ப்பிக்கப்பட்டன

கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு காலாண்டு அடிப்படையில் உரிய மாதிரிப்படிவங்கள் மூலம் 4 சந்தர்ப்பங்களிலும், மத்திய வங்கி அறிக்கைக்கு அமைச்சின் தகவல்கள் 2025 மார்ச் மாதமும் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும் வருடாந்த செயற்றிட்டத்திற்கு அமைய 2025.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் அரசாங்க கணக்காய்வு அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

### 2.3.5. 2025 மூலதன ஏற்பாடுகளை செலவிடுவது தொடர்பான நிதிசார் முன்னேற்றப் பொழிப்பு

வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்புப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள திணைக்களம் மற்றும் ஏனைய நியாயாதிக்க நிறுவனங்களின் 2025 ஆம் ஆண்டுக்கு திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட மூலதன நிதி தொடர்பான ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| தொடர் இல | திணைக்களம்/ நிறுவனம் | மூலதன ஏற்பாடு (ரூ.மி.) | மூலதன செலவினம் (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| **வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு** | | 88.61 | 52.61 | 59 |
| திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் | | | | |
| 01 | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 5179.00 | 4791.62 | 93 |
| 02 | கட்டிடங்கள் திணைக்களம் | 75.00 | 74.85 | 99 |
| 03 | அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் | 75.50 | 41.20 | 55 |
| 04 | நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | 135.00 | 107.40 | 79 |
| 05 | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 93.63 | 100.00 | 106 |

### 2.3.6. எதிர்கால நோக்கு

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களினால் 2026 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சிபாரிசைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன், வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை சம்பந்தமாக அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டப் பிரேரணைகள் 17 திறைசேரியின் நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு கோரப்பட்டள்ள தொகை ரூ.மி. 15,203 ஆகும். இதுவரை 08 கருதிட்டப் பிரேரணைகளுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், கருத்திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு நிறுவனங்களுக்கு முறையாக வழிகாட்டலும் வழங்கப்படுகின்றது. மேலும், Rebuild Sri Lanka நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தித்வா அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பின்னாய்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## 2.4 தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

### 2.4.1. “தமக்குரிய இடம் - அழகான வாழ்க்கை”

2025 ஆம் ஆண்டின் ஆரம்பித்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் “யாவருக்கும் புகலிடம்” வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் அரசின் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய “தமக்குரிய இடம் - அழகான வாழ்க்கை” என்பது தொணிப்பொருளாகக் கொள்ளப்பட்டது. கட்டம் 01 இன் கீழ் ரூபா மில்லியன் 2854 மற்றும் கட்டம் 02 இன் கீழ் ரூபா மில்லியன் 1066 ஒதுக்கப்பட்டது. கட்டம் 01 இன் கீழ் 2025.12.31 ஆம் திகதிக்கு ரூ.மி. 2841.30 செலவிடப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 2415 ஆகும். மேலும் கட்டம் 01 இன் கீழ் எஞ்சியுள்ள ரூ.மி. 12 ஆன தொகை உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கம்பஹா கட்டுவாப்பிட்டியில் 12 வீடுகளை நிர்மாணிக்க பயன்படுத்தப்பட்டது. கட்டம் 02 இன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 1066 மற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட 1066 வீடுகளில் 267 வீடுகளின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறே, செவண உதவியின் கீழ் 2015 - 2019 தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இந்த ஆண்டில் ரூ.மி. 200 ஆன தொகை ஒதுக்கப்பட்டதுடன், 740 வீட்டு அலகுகளில் 405 வீட்டு அலகுகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூ.மி. 200 செலவிடப்பட்டது.

### 2.4.2. பழைய தொடர்மாடி வீடுகளை நவீனமயப்படுத்தும் கருத்திட்டம்

நவகம்புர கருத்திட்டம் ஊடாக பழைய தொடர் மாடி வீடுகளை புதுப்பிக்கும் நடவடிக்கைகளை 04 கருத்திட்டங்களின் கீழ் அமுல்படுத்துவதற்காக ரூ.மி. 277.06 ஆன தொகை செலவிடப்பட்டது.

### 2.4.3. அரச வீடமைப்புத் திட்டங்களின் அத்தியாவசிய பராமரிப்பு – கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டம்

அரசின் வீடமைப்புத் திட்டங்களில் அத்தியாவசிய பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூ.மி. 440 ஆன தொகை வரவு செலவுத்திட்டம் மூலம் 08 கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் 2025.12.31 ஆம் திகதிக்கான நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 301.74 ஆகும்.

### 2.4.4. செவண உதவி நிகழ்ச்சித்திட்டம்

செவண லொத்தர் விற்பனை மூலம் கிடைக்கும் பங்களிப்புத் தொகை மூலம் தாபிக்கப்பட்டுள்ள செவண நிதியத்தைப் பயன்படுத்திக் கொண்டு மேற்கொள்ளும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 41 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் 7 வீடுகள் நிறைவு செய்யப்பட்டன. அதற்காக ரூ.மி. 19.205 ஆன தொகை செலவிடப்பட்டது.

### 2.4.5. வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டம்

உள்ளக உருவாக்க நிதியைப் பயன்படுத்தி தமக்குரிய இடம், அழகான வாழ்க்கை எனும் தொனிப்பொருளின் கீழ் 2025 ஆம் ஆண்டு 2500 வீடமைப்புக் கடன்களை பெற்றுக் கொடுப்பதற்காக ரூ.மி. 2500 ஆன மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதில் ரூ.மி. 1933.80 செலவிடப்பட்டு 2676 வீடமைப்புக் கடன்கள் வழங்கப்பட்டன. மேலும் மேற்படி தொணிப்பொருளின் கீழ் அரச அலுவலர்களுக்கு வழங்கப்படும் சேவாபிமானி கடன் திட்டத்தின் கீழ் 1000 கடன்கள் வழங்க ரூ.மி. 1000 ஆன தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதில் 2025.12.31 ஆம் திகதிக்கு ரூ.மி. 648.85 ஆன தொகையைப் பயன்படுத்தி 742 வீடமைப்புக் கடன்கள் வழங்கப்பட்டன.

## 2.5. இடம்பெயர்ந்துள்ளவர்களை மீளக் குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டம்

### 2.5.1. 2025 நிதிசார் முன்னேற்றம்

| தொடர் இல | கருத்திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடு 2025 (ரூ.மி.) | செலவினம் (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் **2025.12.31 (%)** |
|---|---|---|---|---|
| 01 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு செங்கல் மற்றும் சாந்துபூசப்பட்ட நிரந்தர வீடுகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 2,500.00 | 2,468.37 | 98.73 |
| 02 | மீள் குடியேற்றல் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம் | 1,000.00 | 836.17 | 83.62 |
| 03 | நிலக்கண்ணி வெடி அகற்றல் தேசிய நிலையம் | 70 | 67.83 | 96.9 |

### 2.5.2. பௌதீக முன்னேற்றம்

* 2025.12.31 ஆம் திகதியளவில் 2,041 வீடுகள் முற்றாக நிர்மாணித்து முடிக்கப்பட்டன.
* நிலக்கண்ணி வெடிகளை அகற்றி விடுவித்துள்ள நிலத்தில் அளவு ஆண்டினுள் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு வரையான முன்னேற்றத்தை அடைந்துள்ளமை.
* வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 5,389 குடும்பங்களுக்கு நீர் இணைப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் 2,669 குடும்பங்களுக்கு வீட்டு மின்சாரண இணைப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் 08 மாவட்டங்களில் மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் உள்ளக வீதிகள் 179 இன் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தமை.
* 2025 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொடர்ந்தும் விடுவிக்க வேண்டியுள்ள காணிகளில் 57.77 ஏக்கர்களை விடுவிக்க முடிந்தமை.

### 2.5.3. எதிர்கால நோக்கு

* வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு செங்கல் மற்றும் சாந்துபூசப்பட்ட நிரந்தர வீடுகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2026 ஆம் ஆண்டில் குடிநீர் வசதிகள் மற்றும் வீட்டு மின்சார வசதிகளைக் கொண்ட 2500 வீடுகளை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
* நிலக்கண்ணி வெடி அகற்றும் கருத்திட்டத்தின் கீழ் 5 சதுர கிலோ மீற்றர் அளவான நிலப்பிரதேசத்தை அரச திறைசேரி நிதியைப் பயன்படுத்தி இலங்கை இராணுவத்தின் பொறியியல் படையணி மூலம் மற்றும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற (NGO's & INGO's) மூலம் அகற்றி விடுவிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 2.6. அரச – தனியார் பங்குடைமை வீடமைப்புக் கருத்திட்டங்கள்

### 2.6.1. மிகிந்துபுர வீடமைப்புக் கருத்திட்டம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ், கொழும்பு 05, எட்மன்டன் வீதியில் அமைந்துள்ள 316 பர்சஸ் அளவான காணியில் உயர்மட்ட நடுத்தர வகுப்பைச் சேர்ந்த 560 தொடர் மாடி வீட்டு அலகுகளை நிர்மாணிப்பது 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் மிகக் குறைந்த மட்ட முன்னேற்றம் காரணமாக இதன் நிர்மாணப் பணிகள் 2016 ஆம் ஆண்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பில் இதற்கு முன்னர் அபிவிருத்தியாளர் நிறுவனமாக செயற்பட்ட CDC Industrial Infras நிறுவனத்தின் கீழேயே மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டத்தில் முன்னர் காணப்பட்ட சதுர அடிகளின் அளவு அதிகரித்தமை தொடர்பாக அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய அபிவிருத்தியாளருடன் Letter & intend உடன்படிக்கை மற்றும் Buy Back உடன்படிக்கை மற்றும் Fidic உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வீடமைப்புக் கருத்திட்டம் அரசின் மருத்துவ சங்கத்தினால் மருத்துவர்களின் வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான பிரேரணையாக உள்ளதுடன், தற்போது இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது. மேலும் 2025.11.12 ஆம் திகதியன்று இறுதியாக நடைபெற்ற கலந்துரையாடலின் போது, அரச பொறியியல் கூட்டுத்தாபனம் திட்டத்தை திருத்தம் செய்ய இணங்கியது.

### 2.6.2. நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்புக் கருத்திட்டம் - (வாத்துவ – சீ பிரீஸ் மற்றும் ராகம லாவன்யா ஹையிட்ஸ் கருத்திட்டம்)

196 வீட்டு அலகுகளைக் கொண்ட வாத்துவ சீ பிரீஸ் வீடமைப்புக் கருத்திட்டம் மற்றும் 124 வீட்டு அலகுகளைக் கொண்ட ராகம லாவன்யா ஹையிட்ஸ் வீடமைப்புக் கருத்திட்டம் ஆகியவற்றின் நிர்மாணப் பணிகள் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் அபிவிருத்தியாளராக CML-MTD Construction கம்பனி நடவடிக்கை மேற்கொள்கின்றது. எனினும் அபிவிருத்தியாளர் எதிர்கொண்ட நிதிசார் சிக்கல்கள் கரணமாக 02 கருத்திட்டங்களினதும் நிர்மாணப் பணிகள் தாமதடைந்தன. இக்கருத்திட்டம் தொடர்பாக நிலவிய சட்டரீதியான நிலைமை காரணமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு கருத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அங்கீகாரம் கிடைத்தது. தற்போது எஞ்சியுள்ள வேலைகளுக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் 55-60% என்ற வகையில் பௌதீக முன்னேற்றம் காணப்பட்டது. அரச பொறியியல் கூட்டுத்தாபனம் தற்போது எஞ்சியுள்ள வேலைகளுக்கு புதிய மதிப்பீட்டைத் தயார் செய்து வருகின்றது. அதற்கமைய ஒரு வீட்டின் புதிய பெறுமதி தீர்மானிக்கப்படவுள்ளது. இதன் பின்னர் கருத்திட்டத்தை மேற்கொண்டு செல்லும் போது அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மதியுரை நிறுவனமாக செயற்படவுள்ளதுடன், மதிப்பீடுகளுக்கு அமைய பெறுகைச் செயன்முறையை அடுத்து புதிய ஒப்பந்தாரர் ஒருவர் தெரிவு செய்யப்படவுள்ளார். தற்போது வீடுகளில் எஞ்சியுள்ள வேலைகளை மேற்கொள்ளத் தேவையான மேலதிக நிதி பற்றி கொள்வனவாளர்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்கு அழைத்து விழிப்புணர்வூட்டும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 2.7. இந்திய உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்கள்

### 2.7.1. சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித நாஹிமிகம மாதிரிக் கிராமம்

இக்கருத்திட்டம், அநுராதரபும் மாவட்டத்தின், மஹவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவில், துனுமடலாவ கிராம அலுவலர் பிரிவில் அமுல்படுத்தப்பட்டது. குறைந்தவருமானம் பெறும் 115 குடும்பங்களுக:கு வீடுகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித நாஹிமி விஹாரையின், இல்லக் கட்டிடம், நூலகம், தானசாலையை நிர்மாணிப்பதும் இதில் உள்ளடங்கும். இலங்கை அரசின் நிதி மூலம் 25 வீடுகள் மற்றும் விஹாரையின், இல்லக் கட்டிடம், நூலகம், தானசாலையை நிர்மாணிப்பதும் மேற்கொள்ளப்பட்டது. எஞ்சியுள்ள 90 வீடுகளின் நிர்மாணப் பணிகள் இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் தற்போது நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

### 2.7.2. மன்னார் மடு மாதா தேவாலய வளவில் புலம்பெயர் வீடுகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம்

மன்னார் மடு மாதா தேவாலயத்திற்கு வருகைதருகின்ற பக்தர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் இந்திய உதவியின் கீழ் மடு தேவாலய வளவில் 300 வீடுகளை நிர்மாணிப்பதற்கு சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு ஆரம்பித்துள்ள கருத்திட்டமாகும்.

2020.08.18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டத்தின் ஆரம்ப மதிப்பீடு ரூ.மி. 290 ஆகும். இக்கருத்திட்டம் உரிய காலப்பகுதிக்குள் நிறைவு செய்யப்படாமை காரணமாக அக்கருத்திட்டத்தின் மதிப்பீடு மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு ரூ.மி. 400 பெறுமதிக்கு மீண்டும் 2024.09.25 ஆம் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டு வீடுகளின் எண்ணிக்கையும் 96 வீடுகளாக மாற்றம் செய்யப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் மதியுரையாளராக கட்டிடங்கள் திணைக்களம் செயற்பட்டு வருவதுடன், கருத்திட்ட ஒருங்கிணைப்பை நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு மேற்கொள்கின்றது. இக்கருத்திட்டத்தின் ஒப்பந்தக் காலம் 2024.12.31 ஆம் திகதியில் நிறைவடைந்ததுடன், 2025.02.13 ஆம் திகதி வரை இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் ஒப்பந்தக் காலம் நீடிப்புச் செய்யப்பட்டது.

2025.09.30 ஆம் திகதியளவில் கருத்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

* பௌதீக முன்னேற்றம் 62%
* நிதிசார் முன்னேற்றம் (GOI) 44.2%
* நிதிசார் முன்னேற்றம் (GOSL) 36.6%

ஒப்பந்த காலப்பகுதிக்குள் கருத்திட்டம் நிறைவு செய்யப்படாமை காரணமாக மீண்டும் ஒப்பந்தக் காலத்தை நீடிப்புச் செய்யுமாறு கருத்திட்டத்தின் மதியுரையாளர் சமர்ப்பித்த கோரிக்கைக்கு அமைய 2026.01.31 ஆம் திகதி வரை ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம் இணக்கம் தெரிவித்தது.

### 2.7.3. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக அமுல்படுத்தப்படுகின்ற இந்திய உதவி வீடமைப்புக் கருத்திட்டங்கள்

இங்கு 04 நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான அடிப்படைத் தகவல்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இதன் போது ஒரு கருத்திட்டத்தில் 600 வீடுகள் வீதம் மொத்தமாக 2400 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

| கருத்திட்டத்தின் பெயர் | கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவினம் (ரூ.மி.) | கருத்திட்டக் காலஎல்லை | 2025 ஆம் ஆண்டளவில் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| கிராம சக்தி வீடமைப்புக் கருத்திட்டம் - நாடளாவிய | ரூ.மி. 300.00 | 08 வருடம் | 93 |
| கிராம சக்தி வீடமைப்புக் கருத்திட்டம் - 2017 தென் மாகாணம் - I | ரூ.மி. 300.00 | 08 வருடம் | 25 |
| கிராம சக்தி வீடமைப்புக் கருத்திட்டம் - வட மாகாணம் | ரூ.மி. 300.00 | 08 வருடம் | 29 |
| கிராம சக்தி வீடமைப்புக் கருத்திட்டம் - தென் மாகாணம் - II | ரூ.மி. 300.00 | 08 வருடம் | 6 |

## 2.8. நீர் வழங்கல் பிரிவு

### 2.8.1. 2025 ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் 2025.12.31 திகதிக்கு நிதிப் பிரிவின் ஒட்டுமொத்த முன்னேற்றம்

| தொ.இல. | கருத்திட்டம் /நிகழ்ச்சித்திட்டம் | ஏற்பாடு ரூ.மி. (2025) | 2025.12.31 திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | ரூ.மி. | மூ |
| **நீர் வழங்கல் பிரிவு** | | | | |
| 1. | மழைநீர் சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 50.00 | 22.92 | 45.84 |
| 2. | நீரேந்து பரப்புப் பிரதேசங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் மூலங்கள் மாசடைவதைத் தடுத்தல் | 20.00 | 14.40 | 72 |
| 3. | துப்பரவேட்பாடு பற்றிய அறிவு ஆசியான் மாநாடாட்டின் பின்னாய்வு நடவடிக்கைகளை நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டுள்ள துப்பரவேட்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 50.00 | 48.06 | 96.12 |
| 4. | கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்பரவேட்பாட்டை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 200.00 | 96.44 | 48.22 |
| 5. | இனங்காணப்படாத சிறுநீரக நோய்களுக்கு ஆளாகும் பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் | 250.00 | 76.24 | 30.50 |
| 6. | நீர், துப்பரவேட்பாடு மற்றும் ஆரோக்கியம் பற்றி பிள்ளைகள், சுகாதார ஊழியர்களின் அறிவு மற்றும் திறன்களை வளர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் (யுனிசெவ்) | 8.00 | 7.48 | 93.50 |
| **உபமொத்தம் - I** | | **578.00** | **266.08** | **46.03** |
| 7 | நீர் வழங்கல் மற்றும் துப்பரவேட்பாட்டை மேம்படுத்தும் கருத்திட்டம் (உலக வங்கி) | 4,152.60 | 3,913.50 | 94.24 |
| 8 | நீர் தொழில்நுட்பத்துக்கான கூட்டு ஆராய்ச்சி மற்றும் மாதிரி நிலையம் | 26.00 | 25.98 | 99.92 |
| **உபமொத்தம் -II** | | **4,756.60** | **4,205.56** | **88.41** |
| **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை** | | | | |
| 9 | பயன்பாட்டுச் சேவைகளை வழங்குதல் | 111.32 | 111.32 | 100 |
| 10 | காணி கொள்ளல் | 1,761.60 | 1,761.60 | 100 |
| 11 | அமுலில் உள்ள பாரியளவிலான நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் கருத்திட்டங்கள் (இணைப்பு 1 – கருத்திட்ட முன்னேற்றம்) | 36,997.81 | 21,741.88 | 58.76 |
| 13 | திறன் விருத்தி மற்றும் விநியோகத்தை விஸ்தரிக்கும் கருத்திட்டம் | 7,494.26 | 7,154.16 | 95.46 |

| தொ. இ. | கருத்திட்டம் /நிகழ்ச்சித்திட்டம் | ஏற்பாடு ரூ.மி. (2025) | 2025.12.31 திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொத்தம்** | | **46,364.99** | **30,768.96** | **66.36** |
| **தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்** | | | | |
| 14 | “சமுதாய நீர் அபிமானி” நீர் வழங்கல் திட்டம் | 2,000.00 | 968.67 | 48.43 |
| 15 | சமுதாய நீர் வழங்கலை மேம்படுத்தல் | 700.00 | 142.84 | 20.41 |
| 16 | சமுதாயத்தினர் நிருவகிக்கும் நீர் வழங்கல் திட்டங்களுக்கு நீர்ப் பாதுகாப்பைத் திட்டமிடல் (யுனிசெவ்) | 1.00 | 1.00 | 100 |
| **தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் மொத்தம்** | | **2,701.00** | **1,112..51** | **41.19** |
| **மொத்தம்** | | **53,822.59** | **35,737.36** | **66.40** |

## 2.8.2. துறைசார் முன்னேற்றம் மற்றும் இலக்குகள்

| தொ.இல. | செயலாற்றுகைச் சுட்டி | அலகு | 2024.12.31 திகதிக்கு முன்னேற்றம் | 2025.01.01-2025.12.31 திகதிக்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | இலக்கு | முன்னேற்றம் | % |
| 1 | வீட்டு குழாய் நீர் வழங்கல் அளவை மேம்படுத்தல் | குழாய் நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை | 3,486,296 | 132,165 | 94,726 | 71.67 |
| 2 | குழாய் மலசல வசதிகளின் அளவை மேம்படுத்தல் | குழாய் மலசல இணைப்புக்களின் எண்ணிக்கை | 29,096 | 2,093 | 2,601 | 124 |
| 3 | வருமானம் பெறாத நீர் வழங்கலைக் குறைத்தல் | % | 24.69 | 24.32 | 24.35 | 94.07 |

**மூலம் :தேசிய நீர் வழங்கல் மற்றுமு் வடிகாலமைப்புச் சபை மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் - முன்னேற்ற அறிக்கைகள்**

## 2.8.3. அமுலில் உள்ள பாரியளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (திறைசேரியின் ஏற்பாடுகள்)

| தொ. இல. | கரு த்திட்டத் முழு தின் பெயர் | நிதி மூலம் | கருத்திட் டக் காலஎல் லை | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி.) | திரட்டிய முன்னேற்றம் 2024.12.31 திகதிக்கு | | ஏற்பாடு 2025 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் 2025.01.01 - 2025.12.31 (ரூ.மி.) | திரட்டிய பௌதீக முன்னேற்ற ம் 2025.12.31 திகதிக்கு (மூ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் (ரூ.மி.) | பௌதீ க (மூ) | | | |
| 1 | கொழும்பு பாரிய நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - II | ADB / GoSL | 2014 செப். – 2026 யூன; | 14,124.00 | 19,984.07 | 99 | 463.74 | 463.74 | 99 |
| 2 | கொழும்பு பாரிய நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் -III | ADB / GoSL | 2016 நவம். – 2026 யூன் | 7,222.00 | 12,352.91 | - | - | - | N/A |
| 3 | அம்பதலே நீர் வழங்கல் கட்டமைப்பை மேம்படுத்தும் மற்றும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் | GoSL/France | 2016 யூன் - 2026 யூன் | 13,000.00 | 14,454.97 | 91.45 | 1,400.00 | 1,096.81 | 95.20 |
| 4 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் வடிகாலமைப்புக் கருத்திட்டம் | ADB / GoSL | 2011 ஆகஸ். –2029 டிசம். | 35,881.49 | 35,073.09 | 90.4 | 5,385.00 | 5,699.26 | 97 |
| 5 | அநுராதபுரம் வழக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் I ஆம் கட்டம் | JICA / GoSL | 2014 யூலை - 2025 யூலை | 11,515.00 | 9,102.91 | 99.1 | 909.00 | 381.67 | 100 |
| 6 | அநுராதபுரம் வழக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் II ஆம் கட்டம் | JICA / GoSL | 2018 மே. - 2031 யூன் | 31,598.00 | 417.05 | 13.13 | 432.00 | 13.94 | 13.14 |
| 7 | களுகங்களை நீர் வழங்கல் விரிவாக்கக் கருத்திட்டம் - I | துஜஊ யு ∴ புழளுடு | 2020 டிசம். முதல் 2029 டிசம். | 73,307.00 | 933.29 | 5.44 | 1,050.00 | 89.77 | 6.395 |
| 8 | ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டம் | EDCF Korea / GoSL | 2019 டிசம். – 2028 செப். | 6,291.00 (25.546 Mn USD + Rs.2,147 Mn) | 3,481.76 | 70.7 | 3,401.07 | 743.30 | 76.21 |

| தொ.இல. | கருத்திட்டத்தின் பெயர் | நிதி மூலம் | கருத்திட்டக் காலஎல்லை | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி.) | திரட்டிய முன்னேற்றம் 2024.12.31 திகதிக்கு | | ஏற்பாடு 2025 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் 2025.01.01-2025.12.31 (ரூ.மி.) | திரட்டிய பௌதீக முன்னேற்றம் 2025.12.31 திகதிக்கு (மூ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் (ரூ.மி.) | பௌதீக (மூ) | | | |
| 9 | கண்டி வடக்கு பாததும்பர இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | China Exim Bank / GoSL | 2019 ஆகஸ். - 2027 யூலை | 57,980.00 | 30,946.43 | 88.75 | 19,845.60 | 12,292.45 | 90.36 |
| 10 | பாலி ஆறு நீர் வழங்கல் கருத்திட்டம் (பாரிய யாழ்ப்பாணம்) | | 2024 சன. - 2031 செப். | 116,665.05 | 30.41 | - | 60.00 | 4.44 | 42.8 |
| 11 | கிரிபாவ, எப்பாவல, ராஜாங்கனய மற்றும் நொச்சியாகம இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் I | | 2025 நவம். - 2029 டிசம். | 32,211.13 | - | | 797.4 | - | 1.4 |
| உப மொத்தம் | | | | 399,575.67 | 126,776.89 | - | 33,743.81 | 20,785.38 | - |

## 2.8.4. அமுலில் உள்ள மலசல கழவகற்றல் கருத்திட்டங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (திறைசேரியின் ஏற்பாடுகள்)

| தொ. இல. | கருத்திட்டத்தின் பெயர் | நிதி மூலம் | கருத்திட்டக் காலஎல்லை | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி.) | திரட்டிய முன்னேற்றம் 2024.12.31 திகதிக்கு | | ஏற்பாடு 2025 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் 2025.01.01-2025.12.31 (ரூ.மி.) | திரட்டிய பௌதீக முன்னேற்றம் 2025.12.31 திகதிக்கு (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் (ரூ.மி.) | பௌதீக (%) | | | |
| 1 | கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் | JICA / GoSL | 2010 யூலை - 2027 ஆகஸ். | 22,588.00 | 20,561.32 | 93.93 | 1,381.00 | 213.48 | 95.36 |
| 2 | இரத்மலானை / மொரட்டுவை பிரதேசங்களில் குழாய் மூலம் மலசலகழிவகற்றலை மேம்படுத்தும் கருத்திட்டம் | AFD / GoSL | 2016 யூலை - 2026 டிசம். | 5,548.00 | 2,231.77 | 25 | 1,779.00 | 743.02 | 49.43 |
| உப மொத்தம் | | | | 28,136.00 | 22,793.09 | | 3,160.00 | 956.50 | |
| மொத்தம் | | | | 427,711.67 | 149,569.98 | | 36,903.81 | 21,741.88 | |

## 2.8.5. அமுலில் உள்ள நீர் வழங்கல் கருத்திட்டங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (சபையின் நிதி ஏற்பாடுகள்)

| தொ.இல | கருத்திட்டத்தின் பெயர் | நிதி மூலம் | கருத்திட்டக் காலஎல்லை | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி.) | திரட்டிய முன்னேற்றம் 2024.12.31 திகதிக்கு | | ஏற்பாடு 2025 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் 2025.01.01-2025.12.31 (ரூ.மி.) | திரட்டிய பௌதீக முன்னேற்றம் 2025.12.31 திகதிக்கு (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் (ரூ.மி.) | பௌதீக (%) | | | |
| 1 | கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினவங்கொட இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | CDB / BoC / GoSL | 2017 பெப். -2026 செப். | 33,060.00 | 42,906.18 | 97.11 | 11,419.00 | 11,095.18 | 98.38 |
| 2 | அலுத்கம, மத்துகம, அகலவத்த இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | Indian Exim Bank / BoC / GoSL | 2017 மே - 2026 யூன் | 32,272.73 | 33,601.16 | 96.05 | 4,850.00 | 4,764.61 | 98.86 |
| 3 | தம்புத்தேகவ நீர் வழங்கல் கருத்திட்டம் | CDB / BoC / GoSL | 2018 யூலை - 2026 செப். | 15,840.67 | 29,089.82 | 86.81 | 1,700.00 | 1,157.80 | 95.10 |
| 4 | பொல்கஹவெல, பொதுஹெர, அளவ்வ இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | Indian Exim Bank / BoC / GoSL | 2017 யூலை - 2026 யூன் | 20,207.80 | 20,343.76 | 94.56 | 2,125.00 | 1,062.69 | 95.03 |
| | **மொத்தம்** | | | **101,381.20** | **125,940.92** | | **20,094.00** | **18,080.28** | |

### 2.8.6. உள்நாட்டு வங்கிக் கடன் - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

| தொ. இல. | கருத்திட்டத்தின் பெயர் | நிதி மூலம் | கருத்திட்டக் காலஎல்லை | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி.) | மொத்த செலவினம் 2024.12.31 திகதிக்கு(ரூ. மி.) | திரட்டிய பௌதீக முன்னேற்றம் 2024.12.31 திகதிக்கு (%) | ஏற்பாடு 2025 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் 2025.01.01-2025.12.31 (ரூ.மி.) | திரட்டிய பௌதீக முன்னேற்றம் 2025.12.31 திகதிக்கு (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் - 1 | BOC | Already Completed (10.02.2020) | 5,170.00 | 4,648.00 | 100 | 80.00 | - | 100 |
| 2 | கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் - 2 | BOC | Jan. 2025 | 4,823.00 | 3,016.00 | 98.60 | 285.00 | 284.64 | 100 |
| 3 | கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் -3 | BOC | Already Completed (28.07.2020) | 8,043.25 | 7,443.25 | 100 | 135.00 | 117.054 | 100 |
| 4 | வில்கமுவ நீர் வழங்கல் கருத்திட்டம் | NDB | Jan. 2026. | 3,580.00 | 1,778.00 | 71.89 | 890.00 | 138.718 | 77.88 |
| 5 | லக்கல புதிய நகர நீர் வழங்கல் கருத்திட்டம் | HNB | 2016 யூலை - 2025 டிசம். | 4,496.00 | 3,782.00 | 88.69 | 1,211.42 | 230.75 | 97.09 |
| | மொத்தம் | | | **26,112.25** | **20,667.25** | | **2,601.42** | **771.162** | |

### 2.8.7. 2025 ஆண்டில் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது எதிர்நோக்கிய சவால்கள்

- நீர் மூலங்கள் மாசடைவது பற்றிய சிக்கல்கள்.
- வெள்ளம் காரணமாக மற்றும் வரட்சி காரணமாக நீரின் தரம் பாதிக்கப்படல்.
- தித்வா சூறாவளி மூலம் சுமார் ரூ.பி. 13 அளவாக இடம்பெற்ற பாரிய இழப்புக்களை வழமைக்குக் கொண்டுவருவதிலுள்ள சவால்கள்.
- வரட்சி காரணமாக கேள்விக்கு ஏற்ற வழங்கலை முகாமைத்துவம் செய்வதற்கு போதியளவு களஞ்சியப்படுத்தும் ஆற்றல் உரிய நிறுவனக் கட்டமைப்பில் இல்லாமை.
- நீர் மற்றும் துப்பரவேட்பாடு பற்றிய கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது நிதி வழங்குவதிலுள்ள தடைகள்.
- கருத்திட்டங்கள் /நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது வேறு நிறுவனங்களிடமிருந்து (வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நீர்ப்பாசனம், உள்ளூராட்சி மன்றம் போன்றன) அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்வதில் இடம்பெறுகின்ற தாமதங்கள் மற்றும் அதற்கான அதிக செலவினம்.

## 2.9. வீடமைப்புப் பிரிவு

வீடமைப்புத் துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக கொள்கைகளை வகுத்தல் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது வீடமைப்புப் பிரிவின் பிரதான கடமையாகும்.

### 2.9.1. வீடமைப்பு பற்றிய வழிப்படுத்தல் குழு

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு மேலதிகமாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல் அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, மாகாண சபைகள் போன்ற அமைச்சுக்களின் மூலம் தமமு விடயப்பரப்பு மற்றும் இலக்குக் குழுக்களுக்கான வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சகல அமைச்சுக்களின் மூலமும் அமுல்படுத்தப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை குறிப்பிடத்தக்க தரநியமங்கள், தகவுதிறன்கள் மற்றும் முறையியல்களின் கீழ் கொண்டுவந்து தமக்குரிய இடம்- அழகான வாழ்க்கை எனும் தொணிப்பொருளின் கீழ் "தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்" ஐ திட்டமிட உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு அமைச்சுக்களுக்கு இடையே சிறந்ததொரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக வீடமைப்பு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் சகல அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து நடவடிக்கைக் குழுவொன்றைத் தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி குழு ஊடாக தகவல்களைப் பெற்றுக் கொண்டு தேசிய வீடமைப்புக் கொள்கையை திருத்தம் செய்தல் மற்றும் வீடுகள் பற்றிய தரவு முறைமையை தாபிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### 2.9.2. தேசிய வீடமைப்புக் கொள்கையை திருத்தம் செய்தல்

2014 ஆண்டில் வெளியிடப்பட்ட தேசிய வீடமைப்புக் கொள்கை, நகரமயமாக்கல், இயற்கை அனர்த்தங்களின் தாக்கம் மற்றும் நிலைபேறான மனிதக் குடியிருப்பு அபிவிருத்தி எண்ணக்கருவை அமுல்படுத்தல் போன்ற சிக்கல்கள் பற்றி கவனம் செலுத்தி திருத்தம் செய்யப்பட்டதுடன், அதற்காக 19/0283/122/012 ஆம் இலக்க 2019.02.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது.
தற்போதைய அரசின் "வளவான நாடு – அழகான வாழ்க்கை" கொள்கையில் உள்ளடங்குகின்ற "வசதியான வீடு – ஆரோக்கியமான வாழ்க்கை" வீடமைப்புக் கொள்கையின் கீழ் இலங்கையில் குறிப்பாக குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயத்தினருக்கு தேவைக்குப் போதியளவில் தரமான வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான பிரவேசத்தை செய்துகொடுக்கும் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் இன்றைய வீடமைப்புக் கொள்கை மீண்டும் திருத்தம் செய்யப்படவுள்ளது. அதற்குத் தேவையான தகவல்கள் வீடமைப்பு பற்றி நடவடிக்கை மேற்கொள்ளும் சகல அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து தாபிக்கப்பட்டுள்ள நடவடிக்கைக் குழு மூலம் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், துறைசார் நிபுணர்கள் மற்றும் கல்விமான்களை உள்ளடக்கிய கொள்கை வகுப்பாளர் குழு மூலம் தேசிய வீடமைப்புக் கொள்கையைத் தயார் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.9.3. உலகக் குடியிருப்புத் தினத்தை அமுல்படுத்தல்

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமை உலகக் குடியிருப்புத் தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கமைய இம்முறை உலகக் குடியிருப்புத் தினம் 2025 அக்டோபர் மாதம் 06 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வுகள் மற்றும் புதிய போக்குகள் பற்றி சகல தரப்பினர்களினதும் கவனத்தைக் கோரல் மற்றும் தேசிய மட்டத்திலான கலந்துரையாடலைக்

கட்டியெழுப்புவதன் மூலம் அது பற்றி சகல தரப்பினர்களையும் விழிப்புணர்வூட்டவதும், அவற்றின் பயன்களை அவர்களைச் சென்றடையச் செய்வதும் இதன் நோக்கமாகும்.
இதற்கமைய, உலகக் குடியிருப்புத் தினத்தை உலகம் முழுவதிலும் அமுல்படுத்தும் ஐக்கிய நாடுகள் மனிதக் குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் இலங்கை முகராண்மை நிறுவனம் என்ற வகையில் வீடமைப்பு விடயப்பொறுப்பு அமைச்சான நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுடன் இணைந்து 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 05 ஆம் திகதி “தமக்குரிய இடம் - அழகான வாழ்க்கை” எனும் தொணிப்பொருளின் கீழ் கௌரவ சனாதிபதி அவர்களின் தலைமையில் அலரி மாளிகையில் உலகக் குடியிருப்புத் தினத்தைக் கொண்டாடியதுடன், அன்றைய தினம் மற்றும் அதனை முன்னிட்டு அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறாகும்.

வீடுகளை நிர்மாணித்துக் கொள்ள நிதிசார் ஆற்றல் இல்லாத வறிய குடும்பங்கள் சுமார் 4000 இற்கு துப்பரவேட்பாட்டு வசதிகளை வழங்கும் நோக்கத்துடன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்புக்கள் நிறைவு செய்யப்பட்ட 1000 வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

* ஒரு வீட்டுக்கு ஒரு மில்லியன் ரூபா வீதம் புதிய வீட்டு உதவிகள் 157 ஐ வழங்குதல்.
* தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் பயனாளிகள் 315 பேருக்கு உரித்து உறுதிகளை வழங்கிவைத்தல்.
* தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 2025 உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு 3 வயதுப் பிரிவுகளின் கீழ் நடாத்தப்பட்ட அகில இலங்கை பாடசாலை சித்திரப் போட்டி மற்றும் 2 வயதுப் பிரிவுகளின் கீழ் 2 மொழி மூலங்களில் நடாத்தப்பட்ட அகில இலங்கை கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசளிக்கும் விழா.
* 2025 உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் சமூக திரட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதுடன், நகரக் குறைந்த வசதிகளைக் கொண்டுள்ள குடியிருப்புக்களிலுள்ள சிறுவர் கழக சிறுவர்களை இலக்காகக் கொண்டு அமுல்படுத்தப்பட்ட சித்திரப் போட்டி (3 வயதுப் பிரிவுகளின் கீழ்), நடனப் போட்டி, குறுந் திரைப்படப் போட்டி, இளைஞர் மற்றும் விளையாட்டுக் கழகங்களிலுள்ள இளம் சமுதாயத்தினரை இலக்காகக் கொண்டு ஆண்/ பெண் கிரிக்கட் போட்டி மற்றும் மேற்படி குடியிருப்புக்களில் சிறியளவிலான தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்ட சுயதொழில்வாய்ப்பு மற்றும் தொழில்முயற்சிசார் சந்தையில் வெற்றியீட்டியவர்களை விருது வழங்கி கௌரவித்தமை.
* இலங்கையில் பல்வேறு மாகாணங்களினதும் சூழல் நிலைமைகளுக்கு பொருத்தமானவாறு, மேற்படி மாகாணங்களில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ள மூலப்பொருட்களைப் பயன்படுத்தி இலகுவாகவும், கடினமின்றியும் நிர்மாணித்துக் கொள்ளக்கூடிய வீடமைப்பு மாதிரியமைப்புக்களை அறிமுகம் செய்வதை நோக்காகக் கொண்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வழிப்படுத்தல் மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர்கள் சங்கத்தின் தலைமையில் அமுல்படுத்தப்பட்ட வீடமைப்பு மாதிரிப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டமை.
* கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினால் தெரிவு செய்யப்பட்ட, ஏற்கெனவே தாபிக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களில் மென்மேலும் முனைப்புடனும், விளைதிறன்மிக்கவாறும் இயங்கிவருகின்ற சிறந்த முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.
* இலங்கையில் வீடமைப்புமயமாக்கல், கொள்கைகள், உபாயமுறைகள், திட்டங்கள் தொடர்பான கல்விமான்களின் கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகள்.
* கிளீன் ஸ்ரீலங்கா கருத்திட்டத்துடன் இணைந்து குடியிருப்புக்கள் மற்றும் பொது இடங்களை சுத்தம் செய்தல், சிரமதான நிகழ்ச்சித்திட்டங்கள், மரம் நடுகை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
* குடியிருப்புக்களிலுள்ள சிக்கல்கள், தீர்வுகள் மற்றும் புதிய போக்குகள் தொடர்பாக சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டும் வகையில் தொலைக்காட்சி.். வானொலி கலந்துரையாடல்களை நடாத்தல்.
* பத்திரிகைகளில் மேலதிக பகுதிகளை வெளியிடல் மற்றும் குடியிருப்பு கீதத்தை வெளியிட்டமை.
* குடியிருப்பு வாரத்தை பிரகடனம் செய்து ஒவ்வொரு தரப்பினரையும் இலக்காகக் கொண்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

### 2.9.4. பொது மக்களின் கோரிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகள்

சனாதிபதி செயலகம், பிரதம அமைச்சரின் அலுவலகம், வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக, வீடமைப்பு / வீடமைப்புக் கடன்/ வீடமைப்பு உதவி தொடர்பான கோரிக்கைகள் மற்றும் வீடமைப்பு விடயம் தொடர்பான முறைப்பாடுகள் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு உகந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்புபடுத்திக் கொள்வதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன், வீடமைப்பு விடயம் தொடர்பான முறைப்பாடுகளுக்கு உரிய நிறுவனங்களிடம் அறிக்கைகளைப் பெற்று தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

2025 ஆம் ஆண்டில் பொது மக்களின் கோரிக்கைகள் மற்றும் முறைப்பாடுகள் சுமார் 285 கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அதற்கான அடுத்த கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.9.5. எதிர்கால நோக்கு

- **வீடமைப்பு அபிவிருத்தி**

2026 திறைசேரி ஏற்பாடுகளின் கீழ் தேசிய வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி அதிகாரசபையினால் பின்வரும் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்துவதுடன், பின்னாய்வையும் மேற்கொள்ளல்.

* ஒரு வீடு இல்லாத.்.மேம்படுத்த வேண்டிய நிலையிலுள்ள வீட்டில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறுகின்ற மக்களுக்கான நாடளாவிய “தமக்குரிய இடம் - அழகான வாழ்க்கை” எனும் வீடமைப்பு உதவி நிகழ்ச்சித்திட்டம்
* “யாவருக்கும் புகலிடம்” தொடர்ச்சியான உதவி (2015.்.2019) நிகழ்ச்சித்திட்டம்
* பழைய வீடமைப்புத் திட்டங்களை நவீனமயப்படுத்தல்
* நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்புத் திட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

- **வீடமைப்பு பற்றிய வழிப்படுத்தல் குழு**

வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பாக சகல அமைச்சுக்கள் மற்றும் அரச .்.பகுதியளவிலான அரச நிறுவனங்கள்.்.திணைக்களங்களை ஒருங்கிணைப்புச் செய்து வீடுகள் பற்றிய வழிப்படுத்தல் குழுவைத் தாபிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக்குழு வருடாந்தம் பல தடவை கூட்டப்படும் என்பதுடன், அதன் மூலம் சகல அமைச்சுக்களினாலும் அமுல்படுத்தப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை குறிப்பிட்ட தரநியமங்கள், தகவுதிறன்கள் மற்றும் முறையியலின் கீழ் கொண்டுவந்து “தமக்குரிய இடம் - அழகான வாழ்க்கை” எனும் தொணிப்பொருளின் கீழ் தேசிய வீடமைப:பு நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி குழுவினூடாக தகவல்களைத் திரட்டி தேசிய வீடமைப்புக் கொள்கையைத் திருத்தம் செய்தல் மற்றும் வீடுகள் பற்றிய தரவு முறைமையைத் தாபிக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- **தேசிய வீடமைப்புக் கொள்கையை திருத்தம் செய்வதற்கான தகவல்களை வழங்குமல்**

2014 ஆண்டில் வெளியிடப்பட்ட தேசிய வீடமைப்புக் கொள்கை, நகரமயமாக்கல், இயற்கை அனர்த்தங்களின் தாக்கம் மற்றும் நிலைபேறான மனிதக் குடியிருப்பு அபிவிருத்தி எண்ணக்கருவை அமுல்படுத்தல் போன்ற சிக்கல்கள் பற்றி கவனம் செலுத்தி திருத்தம் செய்யப்பட்டதுடன், அதற்காக 19/0283/122/012 ஆம் இலக்க 2019.02.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

தற்போதைய அரசின் “வளவான நாடு – அழகான வாழ்க்கை” கொள்கையில் உள்ளடங்குகின்ற “வசதியான வீடு – ஆரோக்கியமான வாழ்க்கை” வீடமைப்புக் கொள்கையின் கீழ் இலங்கையில் குறிப்பாக குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயத்தினருக்கு தேவைக்குப் போதியளவில் தரமான வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான பிரவேசத்தை செய்துகொடுக்கும் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் இன்றைய வீடமைப்புக் கொள்கை மீண்டும் திருத்தம் செய்யப்படவுள்ளது.

வீடமைப்பு பற்றி நடவடிக்கை மேற்கொள்ளும் சகல அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து தாபிக்கப்பட்டுள்ள நடவடிக்கைக் குழுவை ஒருங்கிணைப்புச் செய்து வீடமைப:புக் கொள்கையை திருத்தம் செய்வதற்கான தகவல்களை வழங்குவது இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

- **உலகக் குடியிருப்புத் தினத்தை அமுல்படுத்தல்**.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமை உலகக் குடியிருப்புத் தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கமைய இம்முறை உலகக் குடியிருப்புத் தினம் 2025 அக்டோபர் மாதம் 07 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பான சிக்கல்கள், மாற்றுவழிமுறைகள், தீர்வுகள் மற்றும் புதிய போக்குகள் பற்றி சகல தரப்பினர்களினதும் கவனத்தைக் கோரல் மற்றும் தேசிய மட்டத்திலான கலந்துரையாடலைக் கட்டியெழுப்புவதன் மூலம் அது பற்றி சகல தரப்பினர்களையும் விழிப்புணர்வூட்டுத் மற்றும் அவற்றின் பயன்கள் அவர்களைச் சென்றடையச் செய்வதும் இதன் நோக்கமாகும்.

அதற்கமைய, உலகக் குடியிருப்புத் தினத்தை உலகம் முழுவதிலும் அமுல்படுத்துகின்ற ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் இலங்கை முகராண்மை நிறுவனமாக வீடமைப்பு விடயப்பொறுப்பு அமைச்சு என்ற வகையில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
வருடாந்தம் உலகக் குடியிருப்புத் தினம் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு பற்றிய சமகால தலைப்புக்களின் ஊடாக கொண்டாடப்படுகின்றது. அதற்காக தொழில்முயற்சிசார் மேம்பாட்டுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள், சிறுவர் மற்றும் இளம் சமுதாயனத்திரை இலக்காகக் கொண்ட போட்டிகள், சிறியளவிலான தொழில்முயற்சிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் உரித்துக் கையளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

- **பொது மக்களின் கோரிக்கைகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்வதை துரிதப்படுத்தல்**

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற பொது மக்களின் கோரிக்கைகளுக்கு பழழபடந ளாநநவ ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
இதற்குப் பொறுப்புவாய்ந்த அலுவலர்களை விழிப்புணர்வூட்டி மக்களின் கோரிக்கைகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் செயன்முறையை மென்மேலும் வேகமாகவும், முறையாகவும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.10. வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

### 2.10.1. 2025 முன்னேற்றம்

வீடமைப்பு ஆணையாளர் பிரிவினால் 2025.01.01 ஆம் திகதி முதல் 2025.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறாகும்.

| தொ.இல. | மேற்கொள்ளப்பட்ட பணிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பணிகள் நிறைவு செய்யப்பட்ட அறுதி உறுதிகள் (இறுதிக் கட்டம்) | 15 |
| 2 | கிடைத்த கடமைசார் கடிதங்கள் | 532 |
| 3 | பொது மக்கள் சந்திப்புக்கள் | 458 |
| 4 | நில வரைபடங்களின் பிரதிகளை வெளியிடல் | 83 |
| 5 | உறுதிகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல் | 35 |
| 6 | தவறுகளை சீராக்கல் செய்யும் உறுதிகளை தயார் செய்தல் | 02 |
| 7 | பகுதியளவிலான நீதிமன்ற விசாரணைகளை நடாத்தல் | 12 |
| 8 | பல்வேறு நீதிமன்றங்களிலும் சாட்சியமளித்தல் | 11 |
| 9 | நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் | 19 |
| 10 | வர்த்தமானி அறிவித்தல்களைத் தயார் செய்தல் | 02 |
| 11 | பத்திரிகை அறிவித்தல்களை தயர் செய்தல் | 01 |
| 12 | வீடமைப்புச் சங்கங்கள் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளல்<br>ஐ. சட்ட மாஅதிபர் திணைக்கத்திற்கு கடிதம் அனுப்புதல்<br>ஐஐ. மத்திய வங்கிக்கு கடிதம் அனுப்புதல்<br>ஐஐஐ. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகி தகவல்களை வழங்குதல் | 02<br>02<br>06 |
| 13 | காணிகளைப் பதிவு செய்யும் அலுவலகங்கயுளுடன் கொடுக்கல் வாங்கல் செய்தல்<br>இருமடிக்கட்டைகளை பரிசோதித்தல்<br>மாதாந்தம் பட்டியல்களை கையளித்தல் | 07<br>10<br>12 |
| 14 | பதிவாளர் நாயகம் திணைக்களத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளல் | 04 |
| 15 | தகவல் உரிமைச் சட்டத்திற்கு அமைய தகவல்களை வழங்குதல் | 12 |
| 16 | தகவல் ஆணைக்குழுவில் விசாரணைகளில் பங்கேற்றல் | 05 |
| 17 | விலைமதிப்புச் சபைக்கு விலைமதிப்பு அறிக்கைகளை சமர்ப்பித்தல் | 06 |

## 2.10.2. எதிர்கால நோக்கு

* தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள போதிலும், 2018 இன் 23 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தொடர்ந்தும் உறுதிகளை வழங்க முடியாது போயுள்ள வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல். இதற்கமைய 87 உறுதிகள் வழங்கப்படவுள்ளன.
* ஆவணங்களைப் பரிசோதித்து உறுதிகளை வழங்குவதற்கான ஆற்றல் பற்றி ஆராய்தல்.
* இந்த ஆண்டில் கிடைக்கும் மக்களின் கோரிக்கைகள் மற்றும் மக்கள் சந்திப்புக்களுக்கு அமைய அடுத்தகட்டப் பணிகளை மேற்கொள்ளல். (இது தொடர்பான பூரண தகவல்களை வழங்கும் ஆற்றல் இல்லை.)
* வெளிக்களப் பரிசோதனை மற்றும் அலுவலக பரிசோதனையை நடாத்தி வீடுகளில் வசிப்பவர்கள்/ வாடகைக் குடியிருப்பாளர்களின் சிக்கல்களுக்குத் தீர்வு வழங்குதல்.
* வெளிக்கள பரிசோதனை மற்றும் அலுவலக பரிசோதனைகளை நடாத்தி வீடுகளில் வசிப்பவர்கள், வாடகைக் குடியிருப்பாளர்களின் சிக்கல்களுக்குத் தீர்வு வழங்குதல்.
* வழக்கு நடவடிக்கைகளுக்கு நீதிமன்றங்களில் சாட்சியளிப்பதற்கு ஆஜராதல்.
* சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் சட்ட ஆலோசனைகளுக்கான கலந்துரையாடல்களில் பங்கேற்றல்.

* சட்ட மாஅதிபர் திணைக்களத்துடன் நீதிமன்ற அலுவல்கள் தொடர்பில் ஏற்புடைய நடவடிக்கைகள் நிறைவேற்றல்.
* வீடமைப்புச் சங்கங்களை கண்காணிப்புச் செய்தல்.
* 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட எஞ்சியுள்ள கடமைசார் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.

## 2.11. நிதிப் பிரிவு

### 2.11.1. 2025 முன்னேற்றம்

2025 ஆம் ஆண்டுக்கு வரவு செலவுத்திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மூலதன மற்றும் மீண்டெழும் ஏற்பாடுகள் தொடர்பிலான கட்டுநிதியைப் பெற்றுக் கொண்டு அத்தொகையை உச்சளவு வினைத்திறன்மிக்கதாக்க நிறுவனத்திற்குள் உரிய நேரத்திற்குள் விநியோகித்து அறிக்கைகளைப் பேணிவருதல் மற்றும் மாதாந்து, வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்து உரிய நேரத்திற்கு பெற்றுக் கொடுப்பதும் நிதிப் பிரிவின் பிரதான செயற்பணியாகும்.

2025 ஆம் ஆண்டுக்கு அமைச்சின் கீழ் வீடமைப்பு, நிர்மாணிப்பு, நீர் வழங்கல் மற்றும் நகர அபிவிருத்தி ஆகிய விடயங்களுக்கு ரூ.மி. 86366.86 ஆன மூலதன மற்றும் ரூ.மி. 1607.14 ஆன மீண்டெழும் செலவிம் என்ற வகையில் வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டது. மேற்படி நிதி ஏற்பாடுகளில் மூலதன செலவினத்திற்கு ரூ.மி. 63528.29 உம், மீண்டெழும் செலவினத்திற்கு ரூ.மி. 1313.42 உம் செலவிடப்பட்டுள்ளது.

### 2.11.2. எதிர்கால நோக்கு

அமைச்சின் வினைத்திறனை வளர்ப்பதற்காக அவ்வவ் பிரிவுகளுடன் நல்லதொரு ஒருங்கிணைப்பைப் பேணி அமைச்சுக்குத் தேவையான சகல பொருட்களையும் உச்ச வினைத்திறனுடன் பெறுகை மற்றும் களஞ்சியப்படுத்தல், விநியோகிப்பதன் மூலம் அமைச்சின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவது மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே நல்லதொரு நிதிசார் கட்டுப்பாட்டைப் பேணிவருவதற்கான புதிய முறையியல்களை அறிமுகம் செய்வதும் நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2.12. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

### 2.12.1. 2025 முன்னேற்றம்

2025 ஆம் ஆண்டில் 13 கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் 06 கணக்காய்வு வினாக்களின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2025.12.31 ஆம் திகதிக்கு கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 03 நடாத்தப்பட்டுள்ளன. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் 13 விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

### 2.12.2. எதிர்கால நோக்கு

2026 ஆம் ஆண்டில் கூடுதல் எண்ணிக்கையான விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனைகளுக்கு கூடுதல் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 ஐ காலாண்டு அடிப்படையில் நடாத்தவும் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 2.13. நிர்மாணப் பிரிவு

### 2.13.1. 2025 முன்னேற்றம்

* பின்வரும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

  ✓ "உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிர்மாணிப்புக்கு காலநிலைக்கு தாக்குப்பிடிக்கும் ஆற்றல் பற்றிய உயர் மட்டத் தேசியக் குழுவை (HLNC) தாபித்தல்" எனும் தலைப்பில் அமைச்சரவை விஞ்ஞானத்தை தயார் செய்தமை.

  ✓ "இலங்கையில் நிர்மாணித்துறையில் ஊழியப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு கொள்கைசார் நடவடிக்கைகளை" மேற்கொள்வதற்கான அமைச்சரவை விஞ்ஞானத்தை தயார் செய்தமை.

  ✓ "அரச நிறுவனங்கள் உட்பட நிர்மாணத்தொழிலின் கனிய அளவைபத்திரங்கள் மற்றும் ஏனைய உரிய வேலை ஒப்பந்த ஆவணங்களில் "ஆற்று மணல்" (River Sand) எனும் பதத்திற்குப் பதிலாக "நுண் மணல்" (Fine Aggregate)" எனும் பதத்தைப் பயன்படுத்துவதன் மூலம் "ஆற்று மணலுக்கு மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்த கொள்கைசார் மறுசீரமைப்புக்கான கோரிக்கை" எனும் தலைப்பில் அமைச்சரவை விஞ்ஞானத்தை தயார் செய்தமை.

* இந்திய இலங்கை அரசுகளின் நிதி வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு அமுல்படுத்தப்படுகின்ற சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித நாஹிமிகம வீடமைப்புக் கருத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

* கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கொன்க்றீட் கழிவுப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் கருத்திட்டம் தொடர்பாக ரூ.மி. 100 ஆன வேலைகள் நிறைவு செய்யப்பட்டமை.

* அமைச்சின் நிருவாகம், காணி மற்றும் கொள்கைகள் பிரிவுகள் தொடர்பில் அலுவலகங்களை ஒதுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* திறமைமிக்க இலங்கையர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிர்மாணத்துறையில் விசேட நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள வெளிநாட்டவர்களுக்கு வீசா அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக குடிவரவு, குடியகழ்வு திணைக்களத்திற்கு 163 சிபாரிசுகள் வழங்கப்பட்டமை.

### 2.13.2. 2026 எதிர்கால நோக்கு

* அரச பொறியியல் கூட்டுத்தாபனம், தேசிய இயந்திரசாதன நிறுவகனம் மற்றும் வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட் கூட்டுதாபனம் ஆகிய நிறுவனங்களுடன் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்து கலந்துரையாடல். அதனூடாக ஒவ்வொரு நிறுவனத்தையும் முறையாக இலாபம் உழைக்கும் நிறுவனங்களாக பேணிவரத் தேவையான அமைச்சின் பங்களிப்பை பெற்றுக் கொடுத்தல்.

* மேற்படி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை நிறைவேற்றும் போது தேவைகளின் அடிப்படையில் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்.

* பிரிவு தொடர்பான கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல்.

* பிரிவு தொடர்பான பாராளுமன்ற வினாக்களுக்கு பதிலளித்தல்.

* திறமைமிக்க இலங்கையர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிர்மாணத்துறையில் விசேட நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள வெளிநாட்டவர்களுக்கு வீசா அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக குடிவரவு, குடியகழ்வு திணைக்களத்திற்கு சிபாரிசுகளை வழங்குதல்.

* தித்வா சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டங்களை கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அமுல்படுத்தல்.

* அமைச்சின் பதவியணியினருக்கான அலுவலகங்களை ஒதுக்குதல் மற்றும் அலுவலகங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கொன்க்றீட் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் கருத்திட்டத்தின் வேலைகளை நிறைவு செய்தல;.

## 2.14. பொறியியல் சேவைகள் பிரிவு

### 2.14.1. 2025 முன்னேற்றம்

* 2025 ஆண்டில் 32 நிர்மாணக் கருத்திட்டங்கள் தொட்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமனுக்களுக்கு தற்போது நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.
* நிலையான தொழில்நுட்பக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற கருத்திட்டங்களுக்கு பின்பற்றப்படகின்ற வழிகாட்டல்கள், மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் மீண்டும் சகல அமைச்சுக்கள் மற்றும் அரச ஒப்பந்த நிறுவனங்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.
* 2025 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்களின் விலை வித்தியாசங்கள் 03 ஆகும் என்பதுடன், ஒப்பந்த விலை வித்தியாசங்கள் 02 இற்கு அங்கீகார் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஏனைய ஒப்பந்தங்களின் விலை வித்தியாசங்களுக்கான உதவி ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன.
* அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் செயற்பாட்டுக்குத் தேவையான அறிவுரைகளை, சிபாரிசுகளாக அமைச்சு மட்டத்தில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் அரச தொழில்சாலைகள் திணைக்களம் மற்றும் ஏனைய அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவி வழங்குவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
* கட்டிடங்கள் திணைக்களத்தி செயற்பாட்டுக்குத் தேவையான அறிவுரைகளை, சிபாரிசுகளாக அமைச்சு மட்டத்தில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் கட்டிடங்கள் திணைக்களம் மற்றும் ஏனைய அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவி வழங்குவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
* கட்டிடங்கள் திணைக்களத்தின் கட்டிடங்களின் உப அட்டவணை (Building Schedule of Rates) மத்திய அரசுக்கு உரித்தான நிறுவனங்களின் கட்டிடங்கள் சார்ந்த பொறியியல் மதிப்பீடுகளைத் தயார் செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக ஆராயும் பொருட்டு நியமனம் செய்யப்பட்ட குழுவின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

### 2.14.2. எதிர்கால நோக்கு

* நிலையான தொழில்நுட்பக் குழுவினால் அரசின் சகல நிர்மாணக் கருத்திட்டங்களினதும் கனியஅளவைப் பத்திரங்களில் விலைமனுக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் உள்ளனவா என்பதை பரிசோதிக்கும் போது நவீனமயப்படுத்தியதாக, கட்டமைப்புசார் முன்னேற்றகரமான திட்டத்திற்கு அமைய அரசாங்க நிர்மாணப் பிரிவில் மேலதிகமாக செலவாகும் நிதிச் செலவினத்தை முகாமைத்துவம் செய்யத் தேவையான உதவியைப் பெற்றுக் கொடுத்தல்.
